Registered as a NewsPaper

விலை ரூபா 7.00

# ஈழநாதம்

EELANATHAM மக்கள் நாளிதழ்.

பக்கங்கள் ~ 08

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | ஆனி -14 | 29-06-2003 | ஞாயிற்றுக்கிழமை | ஓசை 131

தட்டச்சு
தமிழ்/ஆங்கிலம்
ரோனியோ
மெயினொற்றிங்
கணினி
க ல வ ன்
அனைத்து வேலைகளையும் ஒரே இடத்தில் உரிய நேரத்தில் செய்து கொடுக்கப்படும்.
டிப்போ சந்தி, இரத்தினபுரம், கிளிநொச்சி.
நிழற்பட பிரதியாக்கம்(போட்டோ கொப்பி)

- சிறிலங்கா கடற்படைக்குப் புலிகளின் -

# கப்பலை நிறுத்தும் அதிகாரமுண்டு மூழ்கடிக்கும் அதிகாரம் இல்லை!

## போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவர்

(லண்டன்)

**விடுதலைப்புலிகளின் கப்பலை நிறுத்தும் அதிகாரம் கடற்படைக்கு இருந்தது. ஆனால், அதனை மூழ்கடிக்கும் அதிகாரம் கடற்படைக்குக் கிடையாது என சர்வதேசப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் நேற்று பி.பி.ஸி.க்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்திருந்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், கப்பல் மூழ்கடிப்புச் சம்பவம் தொடர்பாக சிறிலங்கா கடற்படையும், விடுதலைப்புலிகளும் அது நடைபெற்ற சமயத்தில் முழுமையான தகவல்களைத் தெரிவிக்கவில்லை.

விடுதலைப்புலிகளின் கப்பல் சர்வதேச கடற்பரப்பில்தான் சென்றது என்று கூறுவது சரியானால் அதைத் தடுக்கும் உரிமை இலங்கை கடற்படைக்கு உண்டு.

விடுதலைப்புலிகளின் கப்பல் அத்தகைய கடற்பரப்பில் செல்வதற்கு அவசியமான சரியான கொடி போன்ற எதையும் தன்னகத்தே கொண்டிருக்கவில்லை.

விடுதலைப்புலிகள் கூறுவது போன்று சிறிலங்கா கடற்படை தான் இந்தக் கப்பலை மூழ்கடித்தது என்பது சரியானால் அவ்வாறு செய்ய கடற்படைக்கு உரிமை இல்லை.

விடுதலைப்புலிகளின் கப்பலில் இருந்த 12பேர் பற்றிய தடயங்கள்

(08ஆம் பக்கம் பார்க்க)

# இருதரப்பினரும் உரிய நேரத்தில் சம்பவம் தொடர்பாக அறியத்தரவில்லை!

(கொழும்பு)

இருதரப்பினரும் உரிய நேரத்தில் கப்பல் தொடர்பாக அறியத்தரவில்லை. இதனால் கண்காணிப்புக் குழுவால் மோதலைத் தவிர்க்க முடியவில்லை என போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு கப்பல் மூழ்கடிப்புத் தொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் கப்பல் தாக்கி அழிக்கப்பட்டமை தொடர்பான போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் அறிக்கையின் விபரம் வெளியிடப்பட்டுள்ளது.

கடந்த 14ஆம் திகதி முல் லைத்தீவுக் கடலுக்கு அப்பால் இடம் பெற்ற இந்தச் சம்பம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு வந்த சர்வதேச போர்நிறுத்தக் கண்காணிப் புக்குழு நேற்று முன்தினம் தனது அறிக்கையினை இருதரப்பினரிடமும் கையளித்திருந்தது.

இந்த அறிக்கையின் விபரங்கள் நேற்று பத்திரிகைகளுக்கு வெளியிடப்பட்டன.

தாக்குதலுக்கு இலக்கான விடுதலைப் புலிகளின் கப்பலின் பணியாளர்களிடம் சிறிலங்கா கடற்படையினால் தொடர்புகொண்டு தகவல்கள் கேட்டதாகவும், ஆனால் உரிய தகவல்கள் வழங்கப்படவில்லையெனவும் தெரிவிக்கப்படுகிறது. இருதரப்பினரும் உரிய நேரத்தில்

(08ஆம் பக்கம் பார்க்க)

## பெல்ஜியம் அமைதி காக்கும்படை அடுத்த மாதம் சிறில. வருகை தரும்

(கொழும்பு)

பெல்ஜியத்தை தலைமையகமாகக் கொண்டு செயற்படும் அமைதி காக்கும்படை ஒன்று சிறிலங்காவிற்கு வரவுள்ளது.

தற்பொழுது இராணுவத்தில் பயிற்சி பெற்றுவரும் இந்தப் படையணி அடுத்த மாதம் சிறிலங்கா வந்து ஒகஸ்ட் மாதம் 15ஆம் திகதி முதல் கண்காணிப்புப் பணியில் ஈடுபடவுள்ளது.

முதலில் 15 பேரைக் கொண்டதாக இருக்கும் இப்படையணியின் உறுப்பினர் தொகை படிப்படியாக அதிகரிக்கப்படவுள்ளது. பல்வேறு நாடுகளைச் சேர்ந்தவர்களும் இதில் உள்ளடக்கப்படவுள்ளனர்.

மனித உரிமை மீறல்கள், குற்றச்

(08ஆம் பக்கம் பார்க்க)

- புலிகளின் கப்பல் மீதான தாக்குதல் குறித்து -

## "நத்தி மித்திர"வில் பதிவான இலத்திரனியல் தகவல்கள் அழிப்பு

விடுதலைப்புலிகளின் கப்பலை சிறிலங்காக் கடற்படை தாக்கியழித்த தினத்தன்று சிறிலங்கா கடற்படை கப்பலான "நத்தி மித்திர" பதிவு செய்த சம்பவம் தொடர்பாக இலத்திரனியல் தகவல்களை சிறிலங்கா கடற்படை அழித்துள்ளது.

அன்றைய சம்பவங்கள் தொடர்பாக விசாரணை செய்ய கடந்த 18ம் திகதி கண்காணிப்புக் குழுவின் தலைமையக அதிகாரிகள் "நத்தி மித்திர" வில் பதிவு செய்யப்பட்ட இலத்திரனியல் பதிவுகளை பரிசோதனை செய்வதற்

(08ஆம் பக்கம் பார்க்க)

## சிறிலங்கா பொலிசாருக்கு இத்தாலியில் பயிற்சி

(கொழும்பு)

சிறிலங்காப் பொலிசாருக்கு இத்தாலியில் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளது இதன்படி ஐம்பது தொடக்கம் நூறு வரையான பொலிசாரை இத்தாலிக்கு அனுப்பி வைக்க அரசிடம் கேட்டிருப்பதாக உள்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

மத்திய மாகாண பொலிசாரின் செயற்திறன் தொடர்பாக நேற்று இடம்பெற்ற ஒருநாள் கருத்தரங்கிலேயே அவர் இத்தகவலை வெளியிட்டார்.

கடந்த காலங்களில் பொலிசாருக்கு இருந்த பல்வேறு குறைபாடுகள் தற்போது நிவர்த்திக்கப்பட்டு வருகின்றன எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

-உழவு இயந்திரத்திலிருந்து -

## தவறிவீழ்ந்த இளைஞன் தலை நசுங்கி மரணம்!

(கண்டாவளை)

முரசுமோட்டையில் உழவு இயந்திரத்தில் நசியுண்டு இளைஞர் ஒருவர் மரணமடைந்துள்ளார். இச்சம்பவம் நேற்றுக்காலை 10.00 மணியளவில் முரசுமோட்டை மூன்றாம் யுனிட் என்னும் இடத்தில் நடைபெற்றது. இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது,

மேற்படி இளைஞனின் உறவினர் வீட்டில் இருந்து கிளிநொச்சிக்கு நெல் ஏற்றிச் சென்றுகொண்டிருந்த உழவு இயந்திரத்தின் எஞ்சின் பகுதியில் இருந்து உழவு இயந்திரத்தின் பெட்டிக்குள் இடமாறி ஏறிய போது தவறி

(08ஆம் பக்கம் பார்க்க)

-மட்டு. மாவட்ட எல்லைப்புறக்காட்டில்-

## புலிகளால் கைது செய்யப்பட்ட இரு சிங்களவரும் விடுதலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லைப்புறமான வெலிக்கந்தை காட்டில் கிராமப் பாதுகாப்புக்காக வழங்கிய ஆயுதங்களுடன் நடமாடிய போது விடுதலைப் புலிகளால் கைதுசெய்யப்பட்ட இரண்டு சிங்களவர்கள் நேற்று விடுதலைப் புலிகளால் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

வெலிக்கந்தையைச் சேர்ந்த சாரதியான விஜயசிறி(வயது45), மாணவரான ரஜிகசேன (வயது 16) ஆகிய இருவருமே விடுதலைப் புலிகளால் அண்மையில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

எல்லைப்புற காட்டுப் புறத்தில் ஆயுதங்களுடன் நடமாடிய வனவிலங்

(08ஆம் பக்கம் பார்க்க)

- போராட்டத்தில் இணைய முன்வந்த -

## 7 சிறுவர்கள் வவுனியாவில் பெற்றோரிடம் ஒப்படைப்பு

வவுனியாவில் நேற்று முன்தினம் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தில் தாமாகவே முன்வந்து இணைந்து கொண்ட ஏழு சிறுவர்கள் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

18 வயதுக்கும் குறைவான இவர்கள் யுனிசெவ் பிரதிநிதிகள், போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் முன்னிலையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் வவுனியா மாவட்ட கொள்கை முன்னெடுப்புப் பொறுப்பாளர் செ.சிறிநாத், நிர்வாகப் பொறுப்பாளர் தெ.இளந்தென்றல் ஆகியோரால் வவுனியா அரசியல்துறைச் செயலகத்தில் வைத்து நேற்று பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

# எந்தவொரு சூழ்நிலையையும் சந்திக்க முப்படைகளும் தயார் நிலையில் உள்ளன

- சிறிலங்காப் பாதுகாப்பு அமைச்சர் மாரப்பனா

(கொழும்பு)

எந்தவொரு சூழ்நிலையையும் சந்திக்கும் நிலையில் முப்படையினரும் தயாராக வைக்கப்பட்டுள்ளனர் என சிறிலங்காப் படைத்துறை அமைச்சர் திலக்மாரப்பன தெரிவித்துள்ளார்.

யாஎல பகுதியில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். சமாதான முயற்சிகளை குழப்புவதற்கும், மக்கள் மத்தியில் அவநம்பிக்கையை ஏற்படுத்துவதற்கும் குழு வொன்று முனைந்து வருகின்றது. டோக்கியோ மாநாட்டில் கிடைத்த நிதி வடக்கு-கிழக்கிற்கு மட்டுமல்லாது அனைத்துப் பகுதிகளுக்கும் செலவிடப்படும். தற்போது மேற்கொள்ளபட்டு வரும் சமாதான முயற்சி வெற்றி பெறும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## சமாதானச் சூழலை பூரணமாக அனுபவிக்க தேசியத்தலைவரின் கரங்களைப் பலப்படுத்துவோம்

-மட்டு -அம்பாறை சிறப்புத் தளபதி

மாவீரர்களின் தியாகத்தால் கட்டியெழுப்பப்பட்ட இன்றைய சமாதான சூழலை நாம் பூரணமாக அனுபவிக்க தமிழீழ தேசியத்தலைவர் அவர்களின் கரங்களைப் பலப்படுத்துவோம் என மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட சிறப்புத்தளபதி ரமேஸ் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் மட்டக்களப்பு கிரானில் மாவீரர் ஜிம்கெலிதாத்தாவின் 17 ஆம் ஆண்டு நினைவு நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இன்று தமிழினம் தலை நிமிர்ந்து நிற்பதற்குக் காரணமானவர்கள் இம் மாவீரர்கள். இவர்களது தியாகம், அர்ப்பணிப்புக்கள் என்பன தமிழினத்திற்கு வந்த தடைகளையெல்லாம் தகர்த்துள்ளன. மாவீரர்களின் தியாகமே இன்றைய சமாதானச் சூழலை தோற்றுவித்துள்ளது. இச்சூழலில் சிறிலங்கா அரசு பேச்சுவார்த்தைகளை காலம் கடத்துகின்றதே தவிர தமிழ் மக்களுக்கு உருப்படியான செயல் ஒன்றையும் செய்யவில்லை.

(08ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### விவசாயிகளே!

உங்கள் வீட்டுத்தோட்டத்தை வளமாக்கத்தேவையான தென்னை, பலா, மாதுளை, எலுமிச்சை (தேசி), கமுகு, கொய்யா, கொடித் தோடை, தோடை, சவுக்கு மற்றும் பல தரமான நல்லின நாற்றுக்களைக் குறைந்த விலையில் நீங்கள் பெறுவதற்கு இன்றே நாடுங்கள். ஒருங்கிணைந்த மாதிரிப் பண்ணை, வட்டக்கச்சி. (3275)

### வவுனியா ஒப்ரிக்கல்

கண் பரிசோதிக்கப்பட்டு மூக்குக் கண்ணாடி 1/2 மணித்தியாலத்தில் பெற்றுக் கொள்ளலாம். உங்கள் வைத்தியத் துண்டுகளுக்கும் உடன் கண்ணாடி வழங்கப்படும். வவுனியா ஒப்ரிக்கல்-30, பஸ்நிலையம், வவுனியா.(3343)


### நன்கொடை வழங்கல்

கரைதுறைப்பற்று பிரதேச சபையால் முல்லைப் பிரதேசத்தில் 5குடும்பங்களுக்கு மலசலகூடம் அமைப்பதற்கான நன்கொடையாக ஒரு குடும்பத்திற்கு ரூபா2000 வீதம் 5 குடும்பங்களுக்கு ரூபா10,000 வழங்கப்பட்டது.

வருடாவருடம் மலசல கூடத்திற்கான நன்கொடை வழங்கப்படுவதாக பிரதேசசபைசெயலாளர் தெரிவித்தார்.

# பேச்சுக்கள் முறிவடைந்தால் அதற்கான பொறுப்பை சிங்களத் தலைமைத்துவமே ஏற்கவேண்டும்

## பொங்கு தமிழ் நிகழ்வில் கஜேந்திரகுமார் பா.உ

இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பை தமிழர் தாயகத்திற்கு வழங்கும் பொறுப்பு தென்னிலங்கை சிங்கள தலைமைத்துவத்திற்கே



உரியது. அந்தப்பொறுப்பை அவர்கள் சரிவர செயற்படுத்தாத பட்சத்தில் பேச்சுவார்த்தை முறிவடைவதற்கான முழுப்பொறுப்பையும் சிங்கள தலைமைத்துவமே ஏற்றுக் கொள்ள வேண்டுமென நேற்று முன்தினம் நடைபெற்ற பொங்கு தமிழ் நிகழ்வில் உரையாற்றிய தமிழ்க்கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்;

கடந்தகால பொங்கு தமிழ் நிகழ்வுகள் முதலாவதாக போர்ச் சூழலில் மக்களின் எழுச்சியின் மத்தியில் நடந்தது. யுத்தநிறுத்தம், புலிகள் மீதான தடைநீக்கம் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துடன்-விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை ஆகிய கருப்பொருட்கள் அங்கு முன்னிலைப்படுத்தப்பட்டன.

இரண்டாவது நிகழ்வில் தமிழ்த் தேசிய இனத்தின் அரசியல் அபிலாசைகளான தமிழ்த்தேசிய இனம் தமிழர் தாயகம், சுயநிர்ணய உரிமை ஆகியன வலியுறுத்தப் பட்டன.

முதல் இரண்டு 'பொங்குதமிழ்' நிகழ்வுகளின் போது வலியுறுத்தப்பட்ட கருப்பொருட்களின் அடிப்டையில் யுத்தநிறுத்தம் அமுலாக்கப்பட்டு, பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட்டாலும் , கடந்த 16 மாத யுத்த நிறுத்தத்தில் தமிழ்த் தேசிய இனத்தின் அகதி வாழ்க்கை, அவல வாழ்க்கை இன்னும் தொடர்கிறது.

சிறிலங்கா இராணுவத்தின் ஆக்கிரமிப்பு தமிழர் தாயத்தில் தொடர்கிறது. தமிழ் மக்கள் மீதான இராணுவ நெருக்குவாரங்கள் அதிகரித்த வண்ணம் உள்ளன. இவ்வாறான சூழ்நிலையில் யுத்தநிறுத்த ஒப்பந்தத்தில் வலியுறுத்தப்பட்ட இயல்பு நிலை தமிழர் தாயகத்தில் உருவாக்க முடியாது என அவர் கூறியுள்ளார்.

இப்படியான காரணங்களினாலும், அத்துடன் தற்போது முன்னெடுத்துச் செல்லப்படும் பேச்சுவார்த்தைகளில், தமிழர் தரப்பு சமபங்காளி அந்தஸ்த்திலிருந்து ஓரங்கட்டப்பட்மையினால் பேச்சுவார்த்தைகள் தேக்கநிலையை அடைந்துள்ளன.

அதன் பிரதிபலிப்பாகச் சமாதானத்தை நோக்கி ஏங்கிக்கொண்டிருந்த தமிழினம் பேச்சுவார்த்தையில் நம்பிக்கையிழந்து வருவது நாம் எல்லோரும் அறிந்த உண்மை. பேச்சுவார்த்தை மீதான நம்பிக்கையை மீளக்கட்டியெழுப்புவதற்கு தமிழர் தரப்பினரின் சமபங்காளி அந்தஸ்து மீள வழங்கப்பட்டு தமிழர் தாயகத்தில் இயல்பு நிலையை உருவாக்க யுத்தத்தினால் சின்னாபின்னப்படுத்தப்பட்ட பொருளாதார வளங்களை மீளமைப்புச்செய்ய சகல அரசியல், நிதி, நிர்வாகக் கட்டமைப்புக்களை நிர்வகிக்க அதிகாரவலுவுள்ள இடைக்கால நிர்வாகத்தை தமிழர் தாயகத்திற்கு வழங்கவேண்டுமென அவர் மேலும் கூறியுள்ளர்.

# படையினர் குறிப்பிடும் எண்ணிக்கையை விட அதிகளவு மிதிவெடிகள் யாழ். இல் புதைப்பு

## ஸ்கொட்லண்ட் மிதி வெடியகற்றும் பிரிவு தகவல்

யாழ். குடாநாட்டில் படையினர் குறிப்பிடுவதைவிட அதிகளவில் மிதிவெடிகள் இருப்பதாக அங்கு மிதிவெடியகற்றும் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ள ஸ்கொட்லண்ட் மிதிவெடியகற்றும் பிரிவு தெரிவிக்கிறது.

இப்பிரிவின் தலைவரின் கருத்துக் கூறுகையில் யாழ்ப்பாணத்தில் எந்தெந்த இடங்களில் மிதிவெடிகள் இருக்கின்றன என்பது தொடர்பாக படையினரால் தரப்பட்ட உத்தியோக பூர்வமான வரைபடங்கள் தெளிவின்மையாகவுள்ளது. இதனால் தாங்கள் பெரும் இடர்பாடுகளைச் சந்திப்பதாகவும் கூறினார். அத்துடன் இந்த வரை படங்களில் இல்லாத சில இடங்களிலும் மிதிவெடிகள் இருப்பதாகவும் படையினர் குறிப்பிட்ட தொகையைவிட அதிகளவு மிதிவெடிகள் இருப்பதாகவும், இதற்கு தங்களுக்கு அதிகளவு மிதிவெடியகற்றும் பணியாளர்கள் தேவையாகவுள்ளதாகவும் இதனாலேயே யாழ்ப்பாணத்தில் மிதிவெடியகற்றும் செயற்பாடு மந்த நிலையிலுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.(33)

### முன்பள்ளி விளையாட்டு விழா

ஆதவன் முன்பள்ளி விளையாட்டு விழா இன்று பிற்பகல் 1.30 மணிக்கு முன்பள்ளி நிர்வாகி கி. மகேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

-கரைதுறைப்பற்று பி.செ.பிரிவில்-

# மணல்,கிரவல் மண் அள்ளுவோர் அனுமதி பெறக் கோரிக்கை

கரைதுறைப்பற்று பிரதேச சபையில் ஆளுகைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள வீதிகளில் கிரவல் மண், மணல், ஏற்றிச் செல்பவர்கள் அதற்கான அனுமதி பெற்றுக் கொள்ளவேண்டும் எனகரைதுறை ப்பற்று பிரதேச சபையினர் தெரிவித்துள்ளனர்.

மேலும் தெரிவிக்கையில், தமது ஆளுகைக்குட்பட்ட பகுதிகளில் இருந்து உள்ளூர் வீதிகளைப் பயன்படுத்திமணல்,கிரவல்மண் ஏற்றுவோர்கள் வழிப்பாவனைக்குரிய கட்டணத்தை அந்தந்தப்பகுதிகளில் உள்ள உப அலுவலகங்களில் கட்டி அதற்கான பற்றுச்சீட்டினைப் பெற்றுக் கொள்ளுமாறும்; மணல், கிரவல் மண் ஏற்றி வீதிகளில் செல்லும் போது வழிப்பாவனை உறுதிப்படுத்தும் பற்றுச்சீட்டினைக் கைவசம் வைத்திருக்குமாறும் கேட்கப்பட்டுள்ள இதேவேளை, வழிப்பாவனைக்குரிய கட்டணம் செலுத்தி பற்றுச்சீட்டு இன்றி மணல், கிரவல் மண் ஏற்றுவோர் மீது நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஆ)

# 11ம் ஆண்டு நினைவலைகள்

தாயின் மடியில் - 13-01-1966

தாயக மண்ணில் - 29-06-1992



ஈழத்தின் நாதத்தை
ஒலிக்க வைத்த அழகா!
என்றும் எம் இதயத்தின்
நாதமாய் ஒலிப்பாய்!

## மேஜர் அழகன்

முன்னைய நாள் ஈழநாதம் நிர்வாகப்பொறுப்பாளர்

(செல்வராசா இளங்கோ)

ஈழநாதம்

# காஷ்மீரில் படைமுகாம் மீது அதிரடி; 6 இந்தியப் படையினர் பலி; 9 பேர் காயம்!

## - சனாதிபதி அப்துல் கலாம் பயணத்தில் சம்பவம்

(புதுடில்லி)

**இந்தியாவின் காஷ்மீரில் முஸ்லிம் தீவிரவாதிகள் நேற்று அதிகாலை நடத்திய தாக்குதலில் ஆறு இந்தியப் படையினர் பலியாகினர். மேலும் ஒன்பது படையினர் பலத்த காயங்களுக்கு உள்ளாகினர். மேற்படி சம்பவம் சனாதிபதி அப்துல் கலாம் காஷ்மீருக்கு விஜயம் செய்துள்ள வேளையில் நடைபெற்றுள்ளது.**

ஜம்முவில் உள்ள இந்திய இராணுவ முகாம் நேற்று அதிகாலை தீவிரவாதிகளின் தாக்குதலுக்கு இலக்காகியது. இதன் போது தீவிரவாதி ஒருவரும் கொல்லப்பட்டதாக இந்தியப் படைத்தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய சனாதிபதி காஷ்மீருக்கான பயணத்தை மேற்கொண்டுள்ள நிலையில், அதனை முன்னிட்டு இங்கு பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில், மேற்படி படைமுகாம் தாக்கப்பட்டமை இந்தியப் படை வட்டாரங்களைப் பெரும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

மேலும், தீவிரவாதிகள் தற்கொலைப் படையினராக முகாமிற்குள் புகுந்து துப்பாக்கிகள், கைக்குண்டுகள் சகிதம் தாக்குதலை நடத்திவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுவிட்டதாக செய்திகள் கூறுகின்றன. சம்பவ இடத்தில் தீவிரவாதியொருவரின் சடலம் படையினரால் மீட்கப்பட்டுள்ளது. அத்தோடு, அதிகாலை தொடங்கிய மோதல்கள் நேற்றுப் பகலும் நீடித்ததாக அறிவிக்கப்படுகிறது.

இந்தத் தாக்குதலைத்தொடர்ந்து மாநிலத்தின் அனைத்து படைமுகாம்களும் மிக தீவிர விழிப்பு நிலையில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது. படைமுகாம்களின் நுழைவாயில்களும் தற்போது மூடப்பட்டுள்ளன.

இந்நிலையில், நடந்து முடிந்த தாக்குதலுக்கு எந்த தீவிரவாத அமைப்பும் உரிமை கோரவில்லை என இந்தியப் படைத்தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


## நிறுவனங்களிடமிருந்து பாதுகாக்க சட்டம்!

(வாஷிங்டன்)

"தொலைபேசி அழைப்பு விடுக்க வேண்டாம்" என்ற பட்டியலில் இலட்சக்கணக்கான அமெரிக்கர்கள் இணைந்துள்ளனர்.

விற்பனை நிலையங்கள் வாடிக்கையாளர்களின் தொலைபேசி இலக்கங்களைப் பெற்றுத் தமது பொருட்களை விளம்பரப் படுத்துகின்றன.

இதனைத்தடுக்க புதிதாகசட்டம் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.



இஸ்ரேலிய இராணுவத்தால் சேதமாக்கப்பட்ட ஹமாஸ் உறுப்பினரின் வீட்டின் இடிபாடுகளில் இருந்து மீட்டெடுக்கப்பட்ட பலஸ்தீனரின் உடலை எடுத்துச் செல்லும் மக்கள்.

# ஈராக் புனர்வாழ்வுப் பணிகளை பரிசீலிக்க பென்டகன் நிபுணர் குழுவினர் பயணம்


(வாஷிங்டன்)

ஈராக்கின் புனர்வாழ்வுப் பணிகளை மறுபரிசீலனை செய்வதற்காக அமெரிக்காவின் பாதுகாப்பு அமைப்பான பென்டகன் அனுபவம் வாய்ந்த தனியார் நிபுணர்கள் சிலரை அனுப்பி உள்ளது.

அமெரிக்க, பிரிட்டன் துருப்புக்கள் மீதான தாக்குதல்கள் அதிகரித்துவரும் இவ் வேளையில் இந்த நிபுணர்கள் அனுப்பப்படுகின்றனர்.

நிபுணர்கள் குழுவின் ஐந்து பேர் அங்கம் வகிக்கின்றனர். அவர்கள் 12 நாட்கள் தங்கி இருந்து ஈராக்கின் புனர்வாழ்வு நடவடிக்கைகளை நேரில் கண்டறிவார்கள்.

பின்னர் அவை குறித்த தமது யோசனைகளை அமெரிக்க அரசாங்கத்துக்கு தெரிவிப்பார்கள்.



ஈராக்கியரின் புகழ் வாய்ந்த சமரா பள்ளிவாசலிலுள்ள உயர் கட்டடமொன்றிலிருந்து இறங்கி வரும் மக்கள் (இது பாரம்பரிய கலையாகக் கருதப்படுகிறது)



மெக்சிகோ நகரில் உள்ள டயனா கசடோராவின் நினைவுத் தூபியும் (இடது) டொரி மேயர் என்ற பல மாடிக் கட்டடமும்

# காஷ்மீர் தீவிரவாதிகளுக்கு பயிற்சியளித்தோர் கைது!

(வாஷிங்டன்)

காஷ்மீரில் தீவிரவாத நடவடிக்கைகளில் ஈடுபட சிலருக்கு பயிற்சியளித்து சதித்திட்டம் தீட்டியதாகக் குற்றம் சாட்டப்பட்ட பதினொரு நபர்களில் எட்டுப் பேர் அமெரிக்காவில் கைது செய்திருப்பதாக அமெரிக்க அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

துப்பாக்கிகளை வைத்திருந்தல், நட்புறவு நாடு ஒன்றுக்கு எதிரான சதித்திட்டத்தில் இணைந்து கொண்டமை என்பவற்றுக்காக இவர்கள் மீது 41 குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இவர்களில் ஐந்து பேர் அமெரிக்கப் பிரஜைகள், பாகிஸ்தான் நாட்டைச் சேர்ந்த ஒருவரும் இதில் அடங்குகின்றார். ஒருவர் தென்கொரியாவில் பிறந்து அமெரிக்காவில் குடியேறியவர் மற்றவர் ஜேர்மன் நாட்டவர்.

இவர்களில் பலர் பாகிஸ்தான் சென்று காஷ்மீர் கிளர்ச்சிக்குழு ஒன்றிற்கு பயிற்சியளித்துள்ளனர்.

# வலுவிழந்தோர் உரிமைகளை பாதுகாக்க ஐ.நா. சாசனம்!


அங்கவீனர்களுக்கான ஐக்கிய நாடுகள் சபையின் சாசனத்துக்கான ஆவணம் அடுத்த ஆண்டின் முற்பகுதியில் பூர்த்தியாக்கப்படும்.

உலகில் அறுபது கோடிபேர் அங்கக் குறைபாடுகளைக் கொண்டவர்களாகக் காணப்படுகின்றனர்.

இவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பது இந்தச் சாசனத்தின் நோக்கமாகும். சாசனத்தை தயாரிக்கும் குழுவின் கூட்டம் கடந்த இரண்டு வாரங்களாக ஐக்கிய நாடுகள் சபையின் தலைமை அலுவலகத்தில் இடம்பெற்றது.

சாசனத்தை வடிவமைக்க சுமார் 25 நாடுகளைச் சேர்ந்த நிபுணர்களுடன் விசேட செயற் குழுவை உருவாக்குவது என இக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பின்னர் இறுதி வடிவம் தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபையின் அங்கத்துவ நாடுகள் தீர்மானிக்க உள்ளன.



மலேசியாவுக்கு அருகே உலகில் மிகப் பெரிய கொள்கலன்களைக் கொண்ட கப்பலை கடந்து செல்லும் மலேசியா மீன்பிடிப்படகு.

# அயோத்தி விவகாரத்தில் நிலைப்பாட்டை அரசு மாற்றாவிடில் நாடு பிளவடையும்!

## - விஷ்வஹிந்து பரிசத் எச்சரிக்கை

(புதுடில்லி)

அயோத்திப் பிரச்சினையில் மத்திய அரசு தனது நிலையை மாற்றிக் கொள்ளாது விட்டால் இந்தியா பல்வேறு துண்டுகளாக உடைந்து சிதறும் என விஷ்வ ஹிந்து பரிசத் எச்சரித்துள்ளது.

இந்தியாவில் பெருகிவரும் இஸ்லாமியர்களின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்த அவர்களுக்கு குடும்பக் கட்டுப்பாட்டு முறையை தீவிரமாக செயற்படுத்த வேண்டும் என்றும் அது வலியுறுத்தியுள்ளது.

அயோத்தியில் இராமர் கோவில் கட்டுவது பற்றி விஷ்வஹிந்து பரிசத்தின் இரண்டாம் நாள் செயற்குழுக்கூட்டம் இடம்பெற்றது.

முதல் நாள் நிகழ்ச்சி முடிந்த பின் செய்தியாளர்களிடம் பேசிய அந்த அமைப்பின் துணைத்தலைவர் அயோத்தியில் இராமர் கோவில் கட்ட அனுமதிக்காது விட்டால் வாஜ்பாய் அரசு உதவவேண்டும் என்று வலியுறுத்தினார்.

விஷ்வஹிந்துப் பரிசத்தின் பொதுச் செயலாளர் செய்தியாளர்களிடம் கருத்துக் தெரிவிக்கும் போது;

அயோத்திப் பிரச்சினை பற்றி முஸ்லிம் அமைப்புக்களுடன் பேச்சு நடத்த மத்திய அரசு முடிவு செய்திருப்பது விமர்சனத்திற்குரியது.

இஸ்லாமியர்களிடம் வாஜ்பாய் சரணடைந்து விட்டார் நாடு விடுதலை அடையும் முன் முஸ்லிம்களிடம் காந்தி அடிகள் சரணடைந்ததால் தான் பாகிஸ்தான் பிரிய நேரிட்டது.

அதே போல் இப்போது முஸ்லிம்களிடம் வாஜ்பாய் சரணடைந்துள்ளது. இந்தியா உடைந்து மேலும் பத்து பாகிஸ்தான்கள் உருவாகும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# கிளர்ச்சியாளர் முன்னேற்றத்தில் பின்னடைவு; லைபீரியாவில் மீண்டும் யுத்த நிறுத்த அறிவிப்பு

(மொன்ரோவியா)

லைபீரியாவின் கிளர்ச்சியாளர்கள் மீண்டும் போர் நிறுத்தப் பிரகடனம் செய்துள்ளனர்.

பத்து நாட்களுக்குள் கிளர்ச்சியாளர்கள் மேற்கொள்ளும் இரண்டாவது பிரகடனம் இதுவாகும்.

சனாதிபதி ஜோர்ஜ் டெயிலருக்கு விசுவாசமான படைகள் கிளர்ச்சியாளர்களை தலைநகருக்கு அப்பால் பின்வாங்கச் செய்த நிலையில் இந்த அறிவிப்பு வெளியாகியது.

இரு தரப்பினருக்கும் இடையில் நடந்த கடும் சண்டையில் கடந்த வாரம் நூற்றுக் கணக்கானோர் பலியாகி இருந்தனர்.

போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்ட பின்னர் ஆயிரக்கணக்கான மக்கள் வெறிச்சோடிக் கிடந்த வீதிகளில் இறங்கி நடமாடுகின்றனர்.

இனிமேலும் யுத்தம் வேண்டாம் என அவர்கள் வீதிகளில் கோசங்களை எழுப்பிய வண்ணம் செல்கின்றனர்.

# விளையாட்டு அரங்கு

-ஜெயந்திரன்

## திட்டமிட்டு ஓரங்கட்டப்படும் குளூஸ்னர்

தென்னாபிரிக்க அணியின் சகலதுறை ஆட்டக் காரரான லான்ஸ் குளூஸ்னர் இங்கிலாந்திற்கு சுற்றுப்பயணத்தை மேற்கொண்டுள்ள தென்னா பிரிக்க அணியில் இணைத்துக் கொள்ளப்பட வில்லை.

இவரது நடவடிக்கைகள் திருப்திகரமாக இல்லை என்று கூறியே அணியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார்.



இந்நிலையில், இவரது நீக்கம் தவறானது எனவும், அணிக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தப்போகின்றது எனப் பலராலும் தெரிவிக்கப்படுகின்றது.

ஒருநாள் போட்டியின் மூலம் சர்வதேச கிரிக்கெட்டிற்கு அறிமுகமாகிய குளூஸ்னர் 1995, 1996 ஆம் ஆண்டில் லண்டனில் நடந்த இங்கிலாந்திற்கு எதிரான போட்டியில் கலந்து கொண்டு தொடர்ந்து பல போட்டிகளில் விளையாடினாலும், பெயர் சொல்லும் அளவிற்கு எந்தப் போட்டியும் அமையவில்லை. இந்நிலையில், குளூஸ்னரை டெஸ்ட் போட்டிகளுக்கு அறிமுகப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கை எழுந்தது. இதற்கமைய முதற் தடவையாக இந்தியாவிற்கு எதிரான டெஸ்ட் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்பட்டார்.

1996-97 காலப்பகுதியில் கொல்கத்தாவில் இப்போட்டி நடைபெற்றது. அந்தப் போட்டியின் முதலாவது ஓவரில் இந்திய அணியின் முன்னாள் கப்டன் அசாருதீன் 5 பவுண்டரிகளை அடித்து பரவசப்படுத்தினார். அப்போது தனது அறிமுகப் போட்டியிலேயே இப்படி ஆகிவிட்டது என்று குளூஸ்னர் மனம் நொந்துபோனார். ஆனால் அதேபோட்டியில் இரண்டாவது இனிங்சில் 8 விக்கெட்டுகளை வீழ்த்தி தென்னாபிரிக்க அணியின் வெற்றிக்கு முக்கிய பங்குவகித்தார். அத்துடன் அவரின் புகழும் அதிகரித்தது.

குளூஸ்னரின் இத்தகைய வளர்ச்சிக்கு முன்னாள் தென்னாபிரிக்க அணித்தலைவர் காலஞ்சென்ற குரேஞ்சியே முக்கியபங்கு வகித்தார். பின் வரிசையில் அதிரடி ஆட்டம் ஆடும் இவரை துணிந்து தொடக்க வீரராகவும், மூன்றாம் நிலை வீரராகவும் களமிறக்கிய குரேஞ்சே அதில் வெற்றியும் கண்டார். கனமான துடுப்பைப் பயன்படுத்தும் குளூஸ்னர் பந்து விழும் வேகத்திலேயே துடுப்பை வீசி அடிப்பதில் திறமை வாய்ந்தவர்.

மேலும் இவரது பந்து வீச்சை எதிர்கொண்டு ஓட்டங்களைக் குவிப்பது என்பது துடுப் பாட்டக் காரர்களுக்கு கல்லில் நார் உரிப்பது போன்றது. அத்துடன் தமது அணியில் முக்கிய துடுப் பாட்டக் காரர்கள் ஆட்டம் இழந்த போதும் தைரியமாக நின்று அதிரடியாக ஓட்டங்களைக் குவித்து அணியை வெற்றிப் பாதைக்கு நகர்த்தியவர். பின்னர் 1998ஆம் ஆண்டு இவரது காலில் காயம் ஏற்பட்டதால் இவரால் போதியளவு வேகமாக பந்து வீச முடியாமல் போனது. இதனால், இவர் மிதவேகப் பந்து வீச்சாளராகவே பயன்படுத்தப்பட்டு வந்தார். ஆனால், இவரது துடுப்பாட்டம் சிறப்பாக அமைந்தமையால் 1999 ஆம் ஆண்டு இடம்பெற்ற உலகக் கிண்ணப் போட்டியில் இவரது பங்கு முக்கியமானது. அந்த உலகக் கிண்ணத் தொடர் நாயகனே குளூஸ்னர் தான். துடுப்பாட்டம், பந்து வீச்சு என்பனவற்றில் சிறப்பாக செயற்பட்டார்.

இவர் 1999 உலகக் கிண்ணப் போட்டியின் போது அவுஸ்திரேலியாவுடனான அரையிறுதிப் போட்டியில் அதிரடியாக ஓட்டங்களைக் குவித்து கிரிக்கெட் ரசிகர்களின் மனங்களை கொள்ளை கொண்டார்.


ஒரு வீரராக குளூஸ்னர் தனது அணிக்கு சிறந்த வெற்றிகளைத் தந்துள்ளார். ஆனால், தனிப்பட்ட முறையில் அவரது நடவடிக்கை மோசமாகவுள்ளது. இதனால், அணியின் நலனைக் கருத்திற் கொண்டு அணியில் சேர்க்கப்பட வில்லை என ஸ்மித் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், குளூஸ்னருக்கு ஆதரவான குரல்கள் பரவலாக எழத் தொடங்கிவிட்டது. இது அணிக்குள் இருந்தும் வெளியில் இருந்தும் வரத் தொடங்கியுள்ளதால் தென்னாபிரிக்க கிரிக்கெட் சபை மீள் பரிசீலனை செய்யும் நிலக்குத் தள்ளப்பட்டுள்ளது.

அணியின் வெற்றிக்கு முக்கிய பங்கு வகிக்கும் குளூஸ்னர் சிறந்த ஒரு வீரரும்கூட சர்வதேச ரீதியில் எந்த அணியும் விரும்பக் கூடிய முக்கிய சகலதுறை வீரர். அவரை இப்படி பந்தாடுகின்றார்களே என்று தென்னாபிரிக்க ரசிகர்கள் கவலையில் ஆழ்ந்துள்ளனர். இங்கிலாந்து தொடருக்குத்தான் இவர் சேர்க்கப்படவில்லையென்று கட்டுப்பாட்டுச்சபை கூறினாலும், திட்டமிட்டுத் தான் இவர் சேர்க்கப்படவில்லை என்பது தெளிவாகின்றது.

தென்னாபிரிக்க அணியில் குளூஸ்னர் இடம் பெறாதது அந்த அணிக்குத் தான் இழப்பே தவிர அவருக்கு எந்தவித இழப்பும் இல்லை என ரசிகர்கள் தெரிவித்துள்ளனர். இதை அந்நாட்டு கிரிக்கெட் சபை உணர்ந்து கொள்ளுமா?

## கமெரூன் வீரர் போட்டியின்போது மரணம்



பிரான்சின் தலைநகர் பாரிசில் இடம்பெற்று வரும் கொன் பெடரேஷன் கிண்ணத்துக்கான உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டம் ஒன்றில் ஆடுகளத்தில் கமெரூன் அணியின் வீரர் மார்க் விவியன்ஃபோ மயங்கி வீழ்ந்து உயிரிழந்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கமெரூன் கொலம்பியா அணிகளுக்கிடையில் நடைபெற்ற அரையிறுதிப் போட்டியின் இரண்டாவது பாதி ஆட்டத்திலேயே இவர் மயங்கி வீழ்ந்ததாகவும் உடனடியாக அவரை மருத்துவமனைக்கு கொண்டு சென்ற போது அவர் இறந்து விட்டதாக மருத்துவர்கள் அறிவித்துள்ளனர்.

இது தொடர்பாக சர்வதேச கால்பந்தாட்ட சம்மேளனம் (பிஃபா) விடுத்த அறிக்கை ஒன்றில்,

களத்தில் இருந்து கொண்டுசெல்லப்படும் போது இவ் வீரர் உயிருடன் இருந்தார். மரணத்தின் காரணத்தை உடனடியாக அறிய முடியாதுள்ளது. இதனால் பிஃபாவும் உதைபந்தாட்ட குடும்பமும் இந்த நம்பமுடியாத துன்ப நிகழ்வினால் இடிந்து போயுள்ளது.

மேற்படி போட்டியில் கமெரூன் அணி 1-0 என்ற விகிதத்தில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

இதன் பின்னர் நடை பெற்ற இரண்டாவது அரையிறுதியில் துருக்கி அணியை பிரான்ஸ் அணி 3-2 என்ற விகிதத்தில் வென்றது.

இப் போட்டியில் முதலாவது கோலை அடித்த பிரான்சின் நட்சத்திர வீரர் தியரிஹென்றி தனது கோலை கமெரூனின் மார்க் விவியன்ஃபோவுக்கு சமர்ப்பணம் செய்கின்றேன் என அறிவித்தார்.

பிரான்ஸ் அணித் தலைவர் கூறுகையில்;

எமக்கு இது போன்று நேர்ந்திருந்தால் நான் இறுதிப் போட்டியில் விளையாடமாட்டேன் கமெரூன் அணி இறுதிப் போட்டியில் விளையாட மறுத்தால் அதை என்னால் புரிந்து கொள்ள முடியும் என்றார்.

28 வயதான ஃபோ கமெரூன் அணிக்காக 65 போட்டிகளில் விளையாடியுள்ளார்.அத்துடன் 1994, 2002 ஆம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டியிலும் விளையாடியுள்ளார். 1998 இல் காயம் காரணமாக விளையாடவில்லை.

## தொடரைக் கைப்பற்றப்போவது லாறாவா? ஹசானா?

சிறிலங்கா மேற்கிந்தியத் தீவு அணிகளுக் கிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி வெற்றி தோல்வி இன்றி நிறைவு பெற்ற நிலையில் இரண்டாவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டி தற்போது ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

முதல் டெஸ்ட் போட்டியில் மேற்கிந்தியத்தீவு அணித் தலைவர் பிறைன்லாறா மிகச் சிறப்பாக ஆடி 209 ஓட்டங்களைப் பெற்று அணியை திறமையாக முன்நகர்த்திச் சென்றாலும் முதல் டெஸ்ட்டில் வெற்றியீட்டும் அவரது கனவு நனவாக வில்லை.

இதற்கு நான்காம் நாள் ஆட்டம் மழை காரணமாக முற்றாகப் பாதிக்கப்பட்டதை அவர்கள் காரணமாகக் கூறினாலும் துடுப்பாட்ட வீரர் அத்தப்பத்துவின் நின்று நிலைத்த ஆட்டமும் அவர்களின் கனவை பொய்யாக்கியது. இந் நிலையிலும் ஐந்தாம் நாள் ஆட்டத்தின் போது மேற்கிந்திய வீரர்கள் வேகமாகத் துடுப்பெடுத்தாடி 9 விக்கெட்டுக்களை இழந்து 477 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் சிறிலங்காவை துடுப்பெடுத்தாடுமாறு பணித்தது. ஆயினும் சிறிலங்காவின் ஆரம்ப துடுப் பாட்ட வீரர்களை இரண்டாவது இனிங்சில் வீழ்த்துவதில் பந்து வீச்சாளர்கள் தோல்வி கண்டதால் போட்டி வெற்றி தோல்வி அற்ற முடிவுக்குச் சென்றது.




ஏற்கனவே சொந்த மண்ணில் ஒரு நாள் போட்டித் தொடரை 2-1 என்ற நிலையில் பறிகொடுத்துள்ள மேற்கிந்தியத்தீவு டெஸ். தொடரைக் கைப்பற்றி தம் நாட்டு ரசிகர்களை திருப்திப் படுத்த வேண்டிய கட்டாய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.

இல்லையெனில் அண்மையில் அவுஸ்திரேலிய அணிக்கு எதிராகப் பெற்ற வரலாற்று வெற்றிகள் அர்த்தமற்றதொன்றாகி விடும் என்ற அங்கலாய்ப்பு மேற்கிந்தியத்தீவினரிடம் பரவலாக நிலவி வருகின்றது.

இதேவேளை, சிறிலங்கா டெஸ்ட் அணியின் புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ள ஹசான் திலகரட்ணவுக்கும் இது முக்கிய போட்டியாக அமைந்துள்ளது. அணித்தலைவராகப் பதவியேற்று இரண்டாவது டெஸ்ட் தொடரில் கலந்து கொள்ளும் அவர் ஒருநாள் தொடரை அத்தப்பத்து தலைமையில் கைப்பற்றிய நிலையில் டெஸ்ட் தொடர் ஹசானுக்கு சவாலாக அமைந்துள்ளது. "அவுஸ்திரேலிய அணியைப் போன்று சிறிலங்கா அணி ஒன்றும் பலமானதல்ல" எனத் தெரிவித்த அணித்தலைவர் பிறைன்லாறா இரு தொடர்களையும் நாம் கைப்பற்றி விடுவோம் என்ற கருத்தை முன்னரே வெளியிட்ட நிலையில் மேற்படி போட்டித் தொடர்கள் பரபரப்பை ஏற்படுத்தின. இந்நிலையில் ஒரு நாள் தொடரை மேற்கிந்தியத்தீவு இழந்தது. இது டெஸ்ட் போட்டித் தொடரை யார் வெல்லப் போகிறார்கள் என்ற போட்டித் தன்மையை மேலும் அதிகரித்தது.

பிறைன் லாறாவுக்கும் சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரனுக்கும் இடையிலான சவால் போட்டியாக அமைந்த இப் போட்டித் தொடரில் ஒரு நாள் தொடரை மேற்கிந்தியத் தீவு இழந்தாலும் நடைபெற்று முடிந்த போட்டிகளில் லாறா வெற்றி பெற்றதாகவே கருதப் படுகின்றது.

ஏனெனில், லாறாவின் விக்கெட்டை சிறிலங்கா பந்து வீச்சாளர்களால் சுலபமாக வீழ்த்த முடியாமல் போனமை மற்றும் முதல் டெஸ்ட் போட்டியில் அபாரமாக ஆடி 209 ஓட்டங்களை குவித்தமை ஒருநாள் போட்டியில் ஒரு போட்டியைத்தவிர மற்றைய இரு போட்டிகளிலும் திறமையை வெளிப்படுத்தியமை போன்றன அவரின் தனிப்பட்ட வெற்றியை உறுதி செய்தன. முதலாவது டெஸ்ட் போட்டியில் 5 விக்கெட்டுகளைக் கைப்பற்றிய முரளியால் லாறாவின் விக்கெட்டை கைப்பற்ற முடியாது போனமை இருவருக்கிடையிலான போட்டியில் லாறா வெற்றி கொண்டுவிட்டார் என்பதையே எண்ணவைக்கிறது.



இதேவேளை, இரண்டாவது டெஸ்ட் போட்டியின் முதல் நாள் ஆட்ட நேர முடிவின்போது முதலில் துடுப்பெடுத்தாடிய சிறிலங்கா அணி தனது முதல் இனிங்சிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 208 ஓட்டங்களைப் பெற்று இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

இது தொடர்பாக டெஸ்ட் தொடரைக் கைப்பற்றி விட வேண்டும் என்ற ஆவலுடன் உள்ள மேற்கிந்தியத்தீவுக்கு சாதகமான ஓர் நிலையைத் தோற்றுவித்துள்ளது இன்னும் மூன்று நாட்கள் எஞ்சியுள்ள நிலையில் மேற்கிந்தியத் தீவு வீரர்கள் தமது திறமைகளை வெளிக்காட்டி வெற்றி பெறுவார்களா என்பதே அனைவரதும் எதிர்பார்ப்பாகும்.

இது இவ்வாறிருக்க டெஸ்ட் தொடர் வெற்றிக்காக ஏங்கும் இரு தலைவர்களில் வெல்லப் போவது லாறாவா? ஹசானா? நாளை மறுதினம் தெரிந்துவிடும்.

□□□

# பழைய களனிப்பால காவலரணில் இருந்த பொலிசாரிடமிருந்து போதைப்பொருள் மீட்பு

## கடத்தியவரிடமிருந்து பறிமுதல் செய்து தம்வசம் வைத்துக் கொண்டனர்

(கொழும்பு)

**கொழும்பு பழைய களனிப் பாலத்தில் காவலரணில் கடமையாற்றும் பொலிசாரிடம் இருந்து பல லட்சம் பெறுமதியான போதைப் பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. போதைப் பொருளைக் கடத்தியவரிடமிருந்து அதனைப் பறிமுதல் செய்த பொலிசார் அதனைத் தம்வசம் வைத்துக் கொண்டதுடன், அவரை விடுவிக்க லஞ்சமும் பெற்றுள்ளனர்.**

இது தொடர்பாக தெரிய வருவதாவது, பொதுமகன் ஒருவரினால் கொழும்பு நகருக்கு கடத்திவரப்பட்ட 350 கிராம் எடையுள்ள ஹெரோயினை மேற்படி காவலரணில் பொலிசார் கைப்பற்றி யுள்ளனர். பின்னர் அந்நபரிடமிருந்து ரூபா 50 ஆயிரம் ரொக்கத்தை லஞ்சமாகப் பெற்றுக் கொண்டு அவரை விடுதலை செய்துள்ளனர்.

தகவல் அறிந்த போதைப் பொருள் குற்றத் தடுப்புப் பொலிசார் சம்பவ இடத்திற்கு விரைந்து சம்பவத்தோடு தொடர்புடைய பொலிசாரையும் லஞ்சப் பணத்தையும் கைப்பற்றியுள்ளனர்.

## பஸ் விபத்தில் இரு பயணிகள் பலி

மகியங்கனை டிப்போவுக்குச் சொந்தமான பஸ் ஒன்று நேற்று முன்தினம் விபத்திற்குள்ளானதில் 02 பயணி கள் உயிரிழந்துள்ளதுடன் 42 பேர் காயமடைந்துள்ளனர்.

பஸ் வண்டி அருகிலுள்ள நீர்த தேக்கத்தினுள் வீழ்ந்துள்ளது.

## சிப்பாயின் மர்ம மரணம்! லெப். தர அதிகாரி கைது!

பல மாதங்களுக்கு முன் மர்மமான முறையில் கொலை செய்யப்பட்ட சிப்பாயின் மரணம் தொடர்பாக லெப். தர அதிகாரி ஒருவரும் ஆறு இராணுவத்தினரும் ஆயுதங்களுடன் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர். தம்புத்தேகம பிரதேசத்தில் வாழைத் தோட்டம் ஒன்றிலிருந்து கைப்பற்றப்பட்ட ரி.56ரக தன்னியக்க துப்பாக்கி ஒன்று, கைக்குண்டுகள் நான்கு, மகசின் இரண்டு, அதிசக்தி வாய்ந்த தொலைத் தொடர்புக் கருவி என்பன மேற்படி லெப்.தர அதிகாரிக்குச் சொந்தமானதாகக் கூறப்படுகின்றது. இவர்கள் மேற்படி ஆயுதங்களுடன் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

## படுகொலைச் சம்பவ இடத்தை நீதிபதிகள் பார்வையிடுவர்

(கொழும்பு)

உடத்தலவின்ன படுகொலைச் சம்பவத்தை விசாரித்து வரும் கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதிகள் அந்தக் கொலைச் சம்பவம் இடம்பெற்ற இடத்தை நேரடியாகப் பார்வையிடவுள்ளனர். வரும் யூலை 10ம் திகதி அன்று இந்த நேரடிப் பார்வையிடல் நடைபெறவுள்ளதாகவும் இதில் அரச தரப்பினரும் எதிர்த்தரப்பினரும் கலந்து கொள்வார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி சம்பவம் தொடர்பான வழக்கு கொழும்பு மேல் நீதிமன்றத்தில் மூன்று நீதிபதிகள் முன்னிலையில் ரயல் அட்பார் முறையில் விசாரிக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

## உளவுப்பிரிவு அதிகாரிகளைப் பாதுகாக்க வெளிநாட்டுக்கு அனுப்பத் திட்டமில்லை

### பாதுகாப்பு அமைச்சர் மாரப்பன தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டின் பாதுகாப்பு சீர்குலைந்துள்ளதாக சுமத்தப்படும் குற்றச்சாட்டுகளும் ஊடகங்கள் சிலவற்றில் வெளிவரும் செய்திகளும் முற்றாக ஆதாரமற்றவை என்று சிறிலங்காப் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன தெரிவித்துள்ளார்.

இது சமாதானத்தைச் சீர்குலைக்கும் நோக்கத்துடனும், அரசை அசௌகரியத்திற்கு உட்படுத்தும் நோக்கத்துடனும் மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கைகள் என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

உளவுப் பிரிவின் அதிகாரிகளை அவர்களது உயிரைப் பாதுகாக்கும் பொருட்டு வெளிநாடுகளுக்கு அனுப்பி வைக்கும் திட்டம் அரசிடம் கிடையாது. உரிய பாதுகாப்புடன் அவர்கள் தமது கடமைகளை நிறைவேற்றலாம் எனவும் செய்தியாளர் மாநாட்டில் பேசுகையில் கூறினார்.

## நேரடி ரயில் சேவை

கொழும்பு கோட்டைக்கும் மட்டக்களப்பிற்கும் இடையிலான நேரடி ரயில் சேவை எதிர்வரும் முதலாம் திகதியிலிருந்து ஆரம பமாகவுள்ளது. இந்த ரயில் சேவை இரண்டு மாதங்களுக்கு முன்னர் ஆரம்பமாகி முதலாவது தினத்திலேயே ரயில் தடம்புரண்டதால் நிறுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.




கொழும்பில் வாகனங்களைச் சோதனையிட திடீர்ச் சோதனை நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. இச்சோதனை நிலையத்தில் நின்று வாகனங்களை மறிக்கும் இராணுவத்தினர்.

## இலங்கை சமாதான நடவடிக்கைகள்

### பிரித்தானிய அரசின் முயற்சிகளுக்கு எதிர்க்கட்சி பூரண ஆதரவு

(கொழும்பு)

இலங்கையில் சமாதானத்தை நிலைநாட்டுவதற்காக பிரிட்டன் அரசு மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு பிரிட்டனின் எதிர்க்கட்சி தனது பூரண ஆதரவைத் தெரிவித்துள்ளது. லண்டனில் வைத்து பிரதமரைச் சந்தித்து கலந்துரையாடியபோது கன்சர் வேட்டிவ் கட்சியின் தலைவர் தனது உறுதிமொழியை வழங்கியுள்ளார்.

## ஊனமுற்ற சிறுவர்களுக்குப் பயிற்சி வழங்க அவுஸ்திரேலியா 20 லட்சம் ரூபா நிதியுதவி

இலங்கையிலுள்ள சிறுவர்களுக்கு நன்மையளிக்கக் கூடியதிட்டங்களை அமுல்படுத்துவதற்கு இலங்கைக்கான அவுஸ்திரேலிய தூதரகம் இரண்டு மில்லியன் ரூபாவினை ஒதுக்கியுள்ளதாக தூதரகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஊனமுற்ற சிறுவர்களுக்கு பயிற்சிகளை வழங்கும் முதன்மை நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டே இந்த உதவி வழங்கப்படுவதாக அவுஸ்திரேலிய தூதரகம் கூறியுள்ளது.

யாழ்ப்பாணம், பருத்தித்துறை, திருகோணமலை, மன்னார், புத்தளம், கொழும்பு உட்பட பல பகுதிகளில் சிறுவர்களுக்கு நன்மையளிக்கும் திட்டங்களை அமுல்படுத்தவுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

## கரும்புகை கக்கும் வாகனங்களை கொழும்பில் தடை செய்ய முடிவு

(கொழும்பு)

சூழலை மாசடையச் செய்யும் வகையில் கொழும்பு மாநகரில் கரும்புகையை வெளியேற்றும் வாகனங்களை எதிர்வரும் ஜூலை மாதம் முதல் தடை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என பொலிஸ் போக்குவரத்து பிரிவின் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இந்தப் புகைவெளியேற்றும் வாகனங்களுக்கு எதிராக பத்தாயிரம் தண்டப்பணம் அறவிடவும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் கூறியுள்ளார். இந்தச் சட்டம் அமுலான பின்னர் கொழும்பு மாநகரில் 80 சதவீதமான வாகனங்களைத் தடைசெய்யும் நிலை ஏற்படலாம் எனறு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அதேசமயம், தற்போது கரும்புகை வெளியேற்றும் வாகனங்களுக்கு 250 ரூபாய் தண்டப்பணம் அறவிடப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## மஹாபொல நிதியச் சர்ச்சைக்கு நீதிமன்றம் செல்ல அரசு முடிவு

(கொழும்பு)

சனாதிபதி நிதியிலிருந்து மஹாபொல புலமைப் பரிசில் நம்பிக்கை நிதியத்திற்கு வழங்கப்படும் நிதி தொடர்பாக எழுந்துள்ள சர்ச்சைக்கு ஜூலை மாத இறுதிக்குள் தீர்வு காணப்படாவிட்டால் நீதி மன்றம் செல்லவுள்ளோம் என்று நம்பிக்கை நிதியத்தின் பணிப்பாளர் நாயகம் திருமதி ஷாமிலா பெரேரா தெரிவித்துள்ளார்.

தேசிய லொத்தர் சபை மூலம் கிடைக்கின்ற இலாபத்தில் ஒரு பகுதி சனாதிபதி நிதியத்துக்கு அனுப்பி வைக்கப்படுகின்றது. பின்னர் அந்நிதி சனாதிபதி நிதியத்திலிருந்து மஹாபொல புலமைப் பரிசில் நம்பிக்கை நிதியத்திற்கு அனுப்பிவைக்கப்படுகின்றது.

ஆனால், இந்நிதி கடந்த 1997 ஆம் ஆண்டு முதல் சனாதிபதி நிதியத்திலிருந்து மஹாபொல நிதியத்திற்கு அனுப்பி வைக்கப்படவில்லை.

இதனால் பல்கலைக்கழக மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்குவதில் பெரும் சிரமம் ஏற்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

## லஞ்ச ஊழல் ஆணையாளர் மீது அமைச்சரவை உபகுழு விசாரணை

(கொழும்பு)

லஞ்ச ஊழல் குற்றத் தடுப்பு ஆணைக்குழுவின் விசாரணைகள் தொடர்பான இரகசியத் தகவல்கள் வெளியான விவகாரத்தில் லஞ்ச ஆணையாளர் விசாரணைக்கு உட்படுத்தப்படவுள்ளார்.

மேற்படி இரகசியத் தகவல்கள் எவ்வாறு வெளிவந்தன என்பது குறித்து விசாரிக்க அமைச்சரவை உபகுழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. இந்த உபகுழு லஞ்ச ஆணையாளர் கிங்ஸ்லி விக்கிரமசூரியவை எதிர்வரும் 9ஆம் திகதி தமது முன்னிலையில் ஆஜராகுமாறு அறிவித்துள்ளது.

இவருடன் மேலும் இரு அதிகாரிகளையும் சமுகமளிக்குமாறு அவ் உபகுழு அறிவித்துள்ளது.

## வைத்திய அதிகாரிகளின் சம்பள முரண்பாடு; சுற்றறிக்கைக்கு அமைச்சரவை அங்கீகாரம்

அரசாங்க வைத்திய அதிகாரிகளின் சம்பள முரண்பாட்டை நீக்குவது தொடர்பான சுற்றறிக்கையை கடந்த வியாழனன்று அமைச்சரவை அங்கீகரித்துள்ளது.

இதனால் இதுவரை காலம் நீடித்திருந்த அரச வைத்தியதிகாரிகளின் சம்பள முரண்பாடு நீக்கப்படுவதாக சுகாதார அமைச்சர் தயாரட்ண தெரிவித்துள்ளார்.

சுற்றறிக்கைக்கு ஏற்ப எதிர்வரும் ஜூலை மாதம் முதல் அரச வைத்தியதிகாரிகளின் சம்பள அதிகரிப்பு நடைமுறைக்கு வருமென அவர் கூறியுள்ளார். 2003 ஆம் ஆண்டிலிருந்து சம்பள அதிகரிப்பிற்கான நிலுவை பகுதிகளாக வழங்கப்படுமென அவர் மேலும் கூறியுள்ளார்.

# பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்கி சித்திரவதை வன்முறைகளைத் தடுக்குக

## - குடும்பப் புனர்வாழ்வு நிறுவனம் பிரகடனம்

(கொழும்பு)

இலங்கையில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவதன் மூலம் இலங்கையில் ஏற்பட்டுவரும் சித்திரவதை வன்முறைகளை தடுக்க வேண்டும் என குடும்பப் புனர்வாழ்வு நிறுவனம் பிரகடனம் ஒன்றை வெளியிட்டுள்ளது.

சித்திரவதைகளுக்கு உள்ளான ஐ.நா. மையம் டென்மார்க்கின் சித்திரவதைக்குள்ளானவர்களுக்கான புனர்வாழ்வு ஆய்வு நிறுவனம் ஆகியவற்றின் அனுசரணையுடன் யாழ். பற்றிக்ஸ் வீதியின் அமைந்துள்ள குடும்ப நல மையத்தில் இடம்பெற்ற சித்திரவதையை தடை செய்வது தொடர்பான ஒன்று கூடலிலேயே மேற்படி பிரகடனம் வெளியிடப்பட்டுள்ளது.

# 16 இலங்கைத் தமிழகதிகள் படகு மூலம் நாடு திரும்பினர்

இந்திய மண்டபம் அகதி முகாமிலிருந்து கடந்த வியாழனன்று 16 இலங்கை அகதிகள் நாடு திரும்பியுள்ளார்கள்.

இவர்கள் இந்தியாவிலிருந்து சிறிய படகு மூலமாக இலங்கை திரும்பிக் கொண்டிருக்கும் வேளையில் பலத்த காற்றினால் கடல் கொந்தளிப்புக்குள் அகப்பட்டார்கள் இவர்கள் வந்த படகு நெடுந்தீவுக் கடற்கரையில் அடைந்தது நெடுந்தீவு கிராம அலுவலர் மூலமாக யாழ் அரச அதிபரின் உதவியுடன் முகமாலையூடாக மன்னார் முருங்கன் பகுதியை வந்தடைதுள்ளார்கள் இவர்கள் அனைவரும் மன்னார் முருங்கன் பகுதியைச் சேர்ந்தவர்கள். (மி)

# சரசாலையில் 31,325 சதுர மீற்றர் மிதிவெடி அபாயத்திலிருந்து மீட்பு!

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் மிதிவெடி அகற்றும் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள குழுக்களில் ஒன்றான "ஹொங்கோ" மிதிவெடி அகற்றும் பிரிவினர் சரசாலைப் பகுதியில் 31325 சதுர மீற்றர் நிலப்பரப்பை மிதிவெடி அபாயத்தில் இருந்து மீட்டுள்ளனர்.

கடந்த நான்கு மாத காலங்களாக இப்பகுதியில் மிதிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ள இவ்வணியினர் மோப்பநாயைப் பயன்படுத்தியே இந் நடவடிக்கையினை மேற்கொண்டு வருகின்றனர். (33)

### பரிசளிப்பு நிகழ்வு

2003ஆம் ஆண்டிற்கான ஊற்றுக் கண் உழைக்கும் பெண்களுக்கான ஊக்குவிப்பு தேட்டம் திட்டத்தின் பரிசளிப்பு நிகழ்வு நேற்று முன்தினம் கிளைக்குரியவர்களுக்கானது கிளிநொச்சி தமிழீழ வைப்பகத்தில் இடம் பெற்றது. கிளை அலுவலர் இ. அமலஅருள்ராஜன் தலைமையில் நிகழ்வு இடம்பெற்றுள்ளது. கிளை மேலாளர் மா. சுதர்ஷன் சிறப்புரை ஆற்றினார். தொடர்ந்து புனித செந்திரேசா பெண்கள் கல்லூரி அதிபர் திருமதி. இ. அரியரட்ணம் சிறப்புரை ஆற்றியதுடன், பரிசில்களையும் வழங்கினார். பணியாளர் செல்வி ச.சு. சுகிதா நன்றியுரையுடன் நிகழ்வு சிறப்புற நிறைவுற்றது.

# கிளிநொச்சிப் பகுதியில் சின்னமுத்து தடைமருந்து

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி வைத்திய அதிகாரி பணிமனையினால் விசேட சின்னமுத்து தடைமருந்து வழங்கப்பட்டுள்ளது. விசேட சின்னமுத்து தடைமருந்து வழங்கும் மேற்படித்திட்டத்தின் முதற் கட்டமாக 26ஆம் திகதி கந்தபுரம் கட்டம் 01 பாடசாலையிலும் நேற்று முன்தினம் கிளி. புனித பெண்கள் திரேசா கல்லூரியிலும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (பா)

# திருக்கேதீஸ்வர ஆலய கும்பாபிசேக நிகழ்வு

திருக்கேதீஸ்வர மஹா கும்பாபிசேகம் எதிர்வரும் 06 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கும் 10.00 மணிக்கும் இடையில் இடம்பெறவுள்ளது.

எண்ணெய்க் காப்பிடுதல் நிகழ்வு வரும் நான்காம் திகதி முதல் ஐந்தாம் திகதி வரையான காலப்பகுதியில் இடம்பெறவுள்ளது.

மண்டல அபிஷேக நிகழ்வு வரும் 07 ஆம் திகதி தொடக்கம் 48 நாட்கள் தொடர்ந்து நடைபெறும். மஹா மண்டல அபிஷேக நிகழ்வு 23.08.2003 சனிக்கிழமை அன்று நடைபெறவுள்ளது என திருக்கேதீஸ்வர ஆலயதிருப்பணி சபையினர் தெரிவித்துள்ளார்கள்.

### கலந்துரையாடல்

ஒவ்வொரு மாதமும் 2ஆம் புதன் கிழமைகளில் மருதங்கேணி உதவி அரச அதிபர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களின் தலைவர்/செயலாளர்களுடன் விளையாட்டுச் சம்பந்தமாக கலந்துரையாடப்படும் என்று மருதங்கேணி உதவி அரச அதிபர்ட பிரிவு விளையாட்டு உத்தியோகத்தர் முகுந்தன் தெரிவிக்கின்றார். (11)

## கண்ணீரில் கரையும் 28வது அகவை

உதயம் 29 □ 06 □ 1975



அஸ்த்தமனம் 01 □ 11 □ 2001


**திருமதி சி. கோமுகி [ஜினா]**

(ஆசிரியை-கொக்கிளாய் அ.த.க. பாடசாலை)

பருத்தித்துறை. (3345)

பாசஉறவுகள்
மிது, விச்சு, அபி.

## 2ம் ஆண்டு நினைவில்...



அன்னையின் மடியில் 02 - 02 - 1966

அன்னியன் அழிப்பில் 29 - 06 - 2001

கடற்புலிகளின் தளபதி

### லெப்.கேணல் கங்கை அமரன் நினைவாக...

அடலேறு வீரமுடன்
கடலேறி பல களம் கண்ட தளபதியே
அலையேறி வந்த பகைதனை
அதிர வைத்த நாயகனே,
விலையில்லா விடுதலையின் தேவைக்காய்
தலைவனுக்கு தோள் கொடுக்கும்
இணையில்ல நின் பணிதனை அறிந்த
வீரமில்லா வீணர்களின் கொடும் செயலால்
உன்னை நாம் இழந்து
ஆண்டுகள் இரண்டு பறந்தோடிப் போனாலும்
நினைவழியா உன் நினைவுடன்
நின் பணி தொடர்வோம்.

குறிப்பு: போராளிகள், உறவினர்கள் யாவரும் 29-06-2003 மதிய போசனத்தில் கலந்து கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

(சி-8179)

மனைவி,பிள்ளைகள்

## மல்லாவி-புளியங்குளம் பேருந்துப் பணியில் ஒருநேரப்பணி உயிலங்குளம் -மல்லாவி- புளியங்குளம் பணியாக மாற்றம்

01.07.2003 ஆம் நாளிலிருந்து மாற்றப்பட்டபணி பின்வரும் நேர ஒழுங்கில் நடைபெறும் என்பதை பொதுமக்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

நேர ஒழுங்கு

**உயிலங்குளம் -புளியங்குளம்**

| உயிலங்குளம் | துணுக்காய் | மல்லாவி | பாலையடி | மாங்குளம் | புளியங்குளம் |
|---|---|---|---|---|---|
| காலை 07.30 | 8.00 | 8.30-9.00 | 9.30 | 10.30 | 11.15 |

**புளியங்குளம் - உயிலங்குளம்**

| புளியங்குளம் | மாங்குளம் | பாலையடி | மல்லாவி | துணுக்காய் | உயிலங்குளம் |
|---|---|---|---|---|---|
| பகல் 12.00 | 12.45 | 01.45 | 2.15 - 2.30 | 3.00 | 3.30 |

குறிப்பு:- 1) மல்லாவி பேருந்து நிலையத்தில் பேருந்துக்கள் வந்தடையும் நேரமும், புறப்படும் நேரமும் தரப்பட்டுள்ளது.
2) மாங்குளத்தில் 15 மணித்துளிகள் நிற்கும். (சி-8190)

முகாமையாளர்,
பயணியர்போக்குவரவுஊர்தி,
வழியனுமதிப்பணியகம்.



## சிந்தனைக்கு

எனது மக்கள் பற்றியும், எனது தேசம் பற்றியும், எனது இயக்கம் பற்றியும் நான் பெருமிதம் கொள்கிறேன்.

**தமிழீழத் தேசியத்தலைவர்.**

ஈழநாதம்
EELANATHAM மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 29-06-2003

# ஒரே குரலில்....!

யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் ஏற்பாட்டில் நிகழ்ந்த பொங்குதமிழ் நிகழ்வு பேரெழுச்சியுடனும், பெரு வெற்றியாகவும் நடந்து முடிந்துள்ளது. இலட்சக்கணக்கான மக்கள் கலந்து கொண்டு தமது உணர்வுகளை வெளிப்படுத்தியுள்ளனர். அச்சுறுத்தல்கள், சவால்கள் என்பனவற்றையும் மீறியதாக இந்நிகழ்வு நடந்தேறியுள்ளது.

இந்நிகழ்வில் எந்தவித வேறுபாடுகளும் இன்றித் தமிழ் மக்கள் ஓரணியில் திரண்டு, ஒரே குரலில் தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளனர். இப்பொங்குதமிழ் நிகழ்வின் ஒரே தொனிப் பொருள் "எமது நிலம் எமக்கு வேண்டும்" என்பதே.

இப்பொங்கு தமிழ் நிகழ்வானது, சிறிலங்கா இராணுவம் உயர் பாதுகாப்பு வலயத்தில் இருந்து வெளியேறி மக்கள் மீளக்குடியேற அனுமதிக்க வேண்டும் என்பதனையே வெளிப்படையாகக் கோருவதாக இருப்பினும், ஒட்டுமொத்தத்தில் சிறிலங்கா இராணுவம் தமிழ் தாயகப் பகுதியில் இருந்து வெளியேற வேண்டும் என்பதனையே அடிப்படையாகக் கொண்டதாகவே இருந்தது. அதாவது, தமிழர் தாயகத்தை சிறிலங்கா இராணுவம் ஆக்கிரமித்துள்ளமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தே ஓரணியில் மக்கள் திரண்டெழுந்துள்ளனர்.

உயர் பாதுகாப்பு வலயத்தில் இருந்து இராணுவம் வெளியேறி மக்களை மீளக்குடியேற அனுமதிக்குமாறு கடந்த சில வருடங்களாகவே மக்கள் போராட்டங்களை நடத்தி வந்துள்ளனர். ஆனால், அரசாங்கமோ, இராணுவமோ அதனைக் கண்டு கொண்டதாக இல்லை. சட்ட விதிகளுக்கு மாறான வகையில் – தாம் ஓர் ஆக்கிரமிப்பாளர்கள் என்பதை இராணுவம் வெளிப்படுத்தி வந்தது. அரசாங்கமே சமாதானப் பேச்சுவார்த்தைகள், அரசியல் தீர்வு என உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் பேசிக் கொண்டாலும் இராணுவத்தின் நிலைப்பாட்டிற்கு மாறான வகையில் சிந்திக்கவோ, செயற்படவோ தயாராக இருக்கவில்லை.

இதேவேளை, விடுதலைப் புலிகள் யுத்த நிறுத்த உடன்பாட்டின் பிரகாரம், மக்களின் இயல்பு வாழ்க்கை திரும்புவதற்கு அவர்கள் சொந்த இடத்தில் குடியேற வேண்டிய அவசியத்தை வலியுறுத்தினர். ஆனால், புலிகளின் இக்கோரிக்கையானது, இராணுவ நலன்களை அடைவதற்கான முயற்சி என்றே சிறிலங்கா இராணுவத்தால் கூறப்பட்டது. அதாவது, மக்களின் குடியிருப்புக்களில் இருந்து இராணுவம் வெளியேற வேண்டும் என்ற கோரிக்கை மக்களின் கோரிக்கை யல்ல, புலிகளின் கோரிக்கை என்ற ரீதியில் வெளிக்காட்டவும் முயற்சிக்கப்பட்டது. அதேவேளை, பாதுகாப்புச் சமநிலை பற்றியும் பேசப்பட்டது. இராணுவத்தின் ஆக்கிரமிப்பை வெளியாரின் ஆலோசனை மூலம் நியாயப்படுத்தவும் முயற்சிக்கப்பட்டது.

ஆனால், நடந்து முடிந்த பொங்கு தமிழ் நிகழ்வானது, இவ்விடயத்தில் தமிழ் மக்கள் அனைவரும் ஒரே நிலைப்பாட்டில் உள்ளனர் என்பதை சகலருக்குமே வெளிப்படுத்தியுள்ளது. அதாவது, இவ்விடயத்தில் தமிழ் மக்களின் உணர்வுகளையே விடுதலைப்புலிகள் பிரதிபலித்தனர் என்பதே யதார்த்தமானது என்பது புரியவைக்கப்பட்டது. ஆனால், இப்பொங்கு தமிழ் நிகழ்விற்குத் தனியாக உயர் பாதுகாப்பு வலயத்தினுள் இருந்து இராணுவம் வெளியேற வேண்டும் என மட்டும் கோருகின்றது என அர்த்தம் கொள்ளுதல் தவறானதாகும். அடிப்படையில் தமிழர் தாயகம் தமிழருக்கு வேண்டும் என்பதே அதன் அடிப்படைத் தத்துவமாகும்.

இதன் வெளிப்பாடாகவே, இப்பொங்கு தமிழ் நிகழ்வில் தமிழ் மக்களனைவரும் ஒரே குரலில், ஒருமித்த கருத்தில் சிறிலங்கா இராணுவம் தமிழர் தாயகத்தில் இருந்து வெளியேற வேண்டும் எனக் கோரியுள்ளனர். அதேவேளை, தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்களுக்குத் தெரிவித்த ஆதரவானது, தமிழ் மக்கள் ஒரே தலைமையின் கீழ் அணிதிரண்டு இக்கோரிக்கையை முன்னெடுக்கத் தயாராகவுள்ளனர் என்பதையும் வெளிப்படுத்தி உள்ளனர். இதன் மூலம் விடுதலைப் புலிகளின் ஏகபிரதிநிதித்துவம் பற்றிக் கேள்வி எழுப்பியவர்களுக்கும் மக்கள் பதில் அளித்துள்ளனர்.

அதுமட்டுமல்ல, ஆக்கிரமித்துள்ள ஓர் இராணுவம் எப்பொழுதாயினும் வெளியேறியே ஆக வேண்டும் என்பதையும், அவை உரிமைக்காகப் போராடிய ஓர் மக்கள் கூட்டத்தின் மனங்களை வெற்றி கொள்ள முடியாது என்பதையும் புரிந்து கொள்ளுதல் வேண்டும். ஆக்கிரமிப்பு இராணுவத்தால் சில அழிவு நடவடிக்கைகளையும், சீர்கேடுகளையும் விளைவிக்க முடியுமே தவிர மக்கள் மனங்களில் இடம்பிடித்துவிட முடியாது என்பதையும் இப்பொங்கு தமிழ் உணர்த்தியிருக்கும். அதாவது இனப்பிரச் சினைக்கு அழுத்தங்கள், அடக்குமுறை மூலம் தீர்வொன்றைத் திணித்துவிடலாம் என்றோ, தமிழ்மக்கள் உரிமைக்கான போராட்டத்தில் களைப்போ, சலிப்போ அடைந்துவிட்டனர் எனக் கருதுதல் தவறானதாகும்.

ஆகையினால், இவற்றை உணர்ந்து கொண்டு சிறிலங்கா அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும். அதாவது, தமிழ் மக்கள் தமது உரிமைகளைவிட்டுக் கொடுத்து விடத் தயாராக இல்லை என்பதையும் தொடர்ந்தும் தமது தேசியத் தலைமையின் கீழ் போராடத் தயாராக உள்ளனர் என்பதையும் புரிந்து கொள்ளுதல் வேண்டும்.

ஆனால், இராணுவத்தினர் பாதுகாப்பு, இராணுவச் சமநிலை என மக்களின் கோரிக்கையினைப் புறந்தள்ள நினைத்தால் இதற்கெதிராக தமிழ் மக்கள் போராட்டங்களை நடாத்த வேண்டியது தவிர்க்க முடியாததாகவே இருக்கும். இதனால், சமாதான முயற்சிகள் முன்னேற்றம் காண்பதும் தடைப்படுவதும் எதிர்பார்க்கத்தக்கதாகவே இருக்கும்.

# கொழும்பில் தொடர் சுற்றிவளைப்பு; மொறட்டுவையில் 616 பேர் விசாரணை!

## -39 பேர் சந்தேகத்தின் பேரில் கைது

கொழும்பு மொறட்டுவ பொலிஸ் பிரதேசத்துக்கு உட்பட்ட பகுதிகளில் நேற்று அதிகாலை பொலிசார் திடீர் தேடுதல் நடவடிக்கையினை மேற்கொண்டனர்.

இதில் 616 பேர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டதுடன் 39 பேர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தெஹிவளை, கல்கிசை, ரத்மலானை, மொறட்டுவ ஆகிய பிரதேசங்களில் இருக்கின்ற சந்தேகத்துக்கிடமான வீடுகளும், வாகனங்களும் சோதனையிடப்பட்டன.

இதில் எழுபது பேர் கொண்ட பொலிஸ் குழுவினர் ஈடுபட்டனர்.

நேற்று அதிகாலை 4.00 மணியளவில் தேடுதல் இடம் பெற்றது.

கைது செய்யப்பட்டவர்கள் தொடர்ந்தும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

கைது செய்யப்பட்டவர்கள் பல்வேறு குற்றச்செயல்களுடன் தொடர்புடையவர்கள் என பொலிசார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, வெள்ளவத்தை பகுதியில் நேற்று முன்தினம் நடைபெற்ற சுற்றிவளைப்புத் தேடுதலில் பதின்மூன்று பேர் கைது செய்யப்பட்டமை தெரிந்ததே.

# அரசின் தாரை வார்ப்பிற்கு பின்னரே டோக்கியோ நன்கொடை கிடைத்துள்ளது

## - சிஹல உறுமய தலைவர் கூறுகிறார்

(கொழும்பு)

'டோக்கியோ மாநாடு வெறும் பொம்மலாட்டமே. அரசு செய்த பல தாரை வார்ப்புக்களின் பின்னரே நன்கொடை கிடைத்தது." இவ்வாறு சிஹல உறுமய கட்சித்தலைவர் நிகால் கருணாதிலக கொழும்பு புதிய நகர சபை மண்டபத்தில் நடைபெற்ற கட்சிக் கூட்டத்தின் போது கூறியுள்ளார்.

மேலும் அவர் உரையாற்றுகையில்; பிரதமர் ரணில் அவசரமாக லண்டனுக்குச் சென்றது ரொனி பிளேயரை சந்திப்பதற்கல்ல, புலிகளைச் சந்தித்துப் பேசுவதற்காகத் தான். முழு உலகமும் இன்று சனநாயகப் பாதையை நோக்கியே பயணிக்கின்றது. சிஹல உறுமய கட்சி ஜே.வி.பியும், பொ.ஐ. முன்னணி என்பனவே இணைத்துவம் பற்றி சிந்திக்கத் தொடங்கி இருக்கின்றன. சிஹல உறுமய கட்சிக்குத் தனியான ஒரு பகுதி சொந்தமானதல்ல. அது முழுநாட்டின் ஒற்றுமை பற்றியே சிந்திக்கின்றது என அவர் தெரிவித்துள்ளார்.

# 17 குற்றச் செயல்களைப் புரிந்த இராணுவச் சிப்பாய் கைது!

(கொழும்பு)

சிலாபம் பொலிஸ் பிரிவில் நிகழ்ந்த குண்டு வீச்சு, கொலை, வீட்டுக்கு தீவைத்தல் போன்ற 17 குற்றச் செயல்களோடு தொடர்புபட்ட வகையில் தேடப்பட்டு வந்த இராணுவச்சிப்பாய் ஒருவர் பிடிபட்டுள்ளார்.

இவர் முன்னர் பொ.ஐ. முன்னணி ஆதரவாளராக இருந்தபோது ஐ.தே. கட்சி ஆதரவாளர்களுக்கு எதிராக வன்முறைகளில் ஈடுபட்டவரெனவும் பின்னர் கட்சிமாறியிருந்ததாகவும் கூறப்படுகிறது. மேலும் அரசியல்வாதிகளின் ஆதரவு காரணமாக பல வன்முறைகளில் ஈடுபட்டவர் என விசாரணைகள் மூலம் தெரியவருவதாக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

# சுடப்பட்ட இன்ஸ்பெக்ரரின் மரணச் சடங்கில் கொள்ளை!

(கொழும்பு)

கடந்த திங்கட்கிழமை தெஹிவளை பொலிஸ் நிலையத்தில் சுட்டுக் கொலை செய்யப்பட்ட இன்ஸ்பெக்ரர் சுனில் தாப்ரூவின் தாயாரின் வீட்டை கொள்ளையர்கள் உடைத்து அங்கிருந்த பணம், தங்கநகை என்பவற்றைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

இன்ஸ்பெக்ரர் தாப்ரூவின் அம்பலாங் கொடை வீட்டில் அவரது இறுதிச் சடங்கு நடைபெற்ற தினத்தில் இக் கொள்ளை இடம் பெற்றுள்ளது.

இந்த வீட்டில் வசித்த அவரது தாயும் சகோதரியும் மரணச் சடங்கில் கலந்து கொண்டிருந்த சமயமே இந்தச் சம்பவம் நடந்துள்ளது.

# 7இலட்சம் ரூபாய் நகைகள் கொள்ளை

கொழும்பு பம்பலப்பிட்டிப் பகுதியில் இரகசிய பொலிசார் எனக் கூறி சிறிய கோவிலொன்றினுள் புகுந்தவர்கள் அங்கிருந்து 7 இலட்சம் ரூபா பெறுமதியான நகைகளை கொள்ளையடித்து சென்றுள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை லோறன்ஸ் வீதியிலுள்ள வீடொன்றில் இருந்த சிறிய கோவிலிலேயே மேற்படி கொள்ளைச் சம்பவம் நடைபெற்றுள்ளது. வாகனத்தில் வந்திறங்கிய ஐவரில் மூவர் ஆயுத முனையில் வீட்டிலிருந்த இரு பெண்களை அச்சுறுத்தி இந்த கொள்ளையில் ஈடுபட்டனர்.

# சிறிலங்காவில் முக்கோணத் தொடர் வருட இறுதியில் நடாத்த முயற்சி

சிறிலங்கா, இங்கிலாந்து, இந்தியா ஆகிய நாடுகளின் கிரிக்கெட் அணிகள் பங்குபற்றும் முக்கோண சுற்றுத் தொடர் ஒன்றை சிறிலங்காவில் இவ்வருட இறுதியில நடத்துவதற்கு, கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை முயற்சிகளை மேற் கொள்வதாக அறியவருகிறது.

இங்கிலாந்து அணி சிறிலங்கா அணியுடன் டெஸ்ட் தொடரிலும் ஒரு நாள் போட்டிகளிலும் கலந்து கொள்வதற்காக வருகை தரவுள்ளது. இவ்விரு அணிகள் விளையாடவுள்ள ஒரு நாள் போட்டிகளோடு இந்திய அணியை இணைத்து முக்கோணப் போட்டித் தொடரை நடத்துவதென்று சிறிலங்கா கிரிக்கெட் சபை தீர்மானித்துள்ளது.

இதற்கிடையில் நீண்ட ஓய்வில் இருக்கும் இந்திய அணி வரும் நவம்பரில் அவுஸ்திரேலியா சுற்றுப் பயணத்துக்கு முன் போட்டிகளில் பங்கு பற்றுவதில்லை என அறிவித்திருந்தது.

எனினும் சிறிலங்காவின் கோரிக்கைக்கு சாதகமான பதில் கிடைத்திருப்பதாக கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

# 2வது டெஸ்ட்ரின் முதல் இனிங்சில் சிறிலங்காவுக்கு 208 ஓட்டங்கள்

'மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிராக ஜெமேக்கா சபீனா பார்க் விளையாட்டரங்கில் நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்டுள்ள இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி அதன் முதலாவது இனிங்சில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 208 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக் கொண்டது.

மூன்றாம் இலக்க துடுப்பாட்ட வீரர் குமார் சங்கக்கார மட்டுமே திறமையாக துடுப்பெடுத்தாடி 75 ஓட்டங்களைப் பெற்றார்.

இலங்கையின் மொத்த எண்ணிக்கையில் உறுதியாகக் கிடைத்த 30 ஓட்டங்கள் இரண்டாவது அதிகூடிய எண்ணிக்கையாக பதிவாகியுள்ளது.

மேற்கிந்தியத்தீவின் புதுமுக வேகப்பந்து வீச்சாளரான எட்வேன்ஸ் 36 ஓட்டங்களுக்கு ஐந்து விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

மேற்கிந்தியத் தீவு முதல் நாள் ஆட்ட நேர முடிவின் போது அதன் முதல் இனிங்சில் விக்கெட் இழப் பின்றி நான்கு ஓட்டங்களை பெற்றுள்ளது.



# 4ஆம் சுற்றுக்கு முன்னேற்றம்

லண்டனில் நடைபெற்று வரும் விம்பிள்டன் டென்னிஸ் சம்பியன்சிப் போட்டிகளின் மூன்றாவது சுற்றில் அமெரிக்காவைச் சேர்ந்த பிரபல வீரர்களில் ஒருவராக ருட்மார்டீன், ஜேர்மன் வீரர் ரெயினர் சல்பரிடம் தோல்வி கண்டுள்ளார்.

இதேவேளை, தரப்படுத்தலில் நான்காவதும் ஐந்தாவதும் இடங்களில் இருக்கின்ற சுவிஸ் வீரர், ரோஜர் குவட்ரிர் அமெரிக்க வீரர், அன்ரி ரொட்ரிக் ஆகியோர் நான்காவது இடத்துக்கு முன்னேறி உள்ளனர்.

மகளிர் பிரிவில் பிரபல வீராங்கனைகளான பெல்ஜியத்தைச் சேர்ந்த கிம் கிளிட்டர்ஸ் அமெரிக்காவைச் சேர்ந்த லீனஸ் வில்லியம்ஸ் லெண்சே டெவன் பேட் ஆகியோரும் நான்காம் சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

# யுத்தத்தால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு ஆயித்திய மலையில் இடைத்தங்கல் முகாம்

(மட்டக்களப்பு)

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கான இடைத்தங்கல் முகாம் ஒன்று மட்டக்களப்பு ஆயித்தியமலையில் அமைக்கப்படவுள்ளது.

யுனிசெவ் நிறுவனத்தின் உதவியுடன் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் இதனை அமைக்கவுள்ளது.

இது தொடர்பான உடன்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு இடைத்தங்கல் முகாம் உட்பட ஒன்பது திட்டங்களை வடக்கு - கிழக்கில் 14 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் மேற்கொள்ள இருப்பதாக தமிழர் புனர்வாழ்வுக்கழக நிறைவேற்றுப் பணிப்பாளர் கே.பி.றெஜி நேற்று செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இத்திட்டங்களில் சிறுவர் பாதுகாப்பு, தொழிற் பயிற்சி, கல்வி என்பனவும் அடங்குகின்றன.

திருகோணமலை மாவட்டத்தில் மேலும் ஒரு இடைத்தங்கல் முகாம் அமைக்கப்படவிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## அமெ.காங்கிரஸ் உறுப்பினர்கள் இருவர் சிறிலங்கா வருகை

(கொழும்பு)

சிறிலங்காவில் வர்த்தக முதலீடுகள் குறித்து ஆராய்வதற்காக அமெரிக்க காங்கிரசின் இரண்டு உறுப்பினர்கள் சிறிலங்காவிற்கு விஜயம் செய்யவுள்ளனர்.

அமெரிக்காவிற்கு விஜயம் செய்த அமைச்சர் மிலிந்த மொறகொட அமெரிக்க காங்கிரசுடன் பேச்சுக்களை நடத்தியதை அடுத்தே இந்த ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டதாக அமெரிக்காவில் உள்ள சிறிலங்காத் தூதரகம் தெரிவித்துள்ளது.அமெரிக்காவிற்கு விஜயம் செய்துள்ள மிலிந்த மொறகொட உலக வங்கியின் பிரதிநிதிகள் மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் ஆகியோரையும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

## சு.க. சிரேஷ்ட உறுப்பினர்கள் அமரசிங்கவைச் சந்தித்துப் பேச்சு

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் சிரேஷ்ட தலைவர்கள் சிலர் லண்டனில் ஜே.வி.பி.தலைவர் சோமவன்ச அமரசிங்கவைச் சந்தித்துத் துப் பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளனர்.

முன்னாள் அமைச்சர்களான மங்கள சமரவீர, நிமால் சிறிபால டி சில்வா ஆகியோரே லண்டனிலுள்ள அமரசிங்கவின் இல்லத்தில் அவரைச் சந்தித்துப் பேசியுள்ளனர்.

சமாதான நடவடிக்கைகள், கூட்டு, நடக்கவிருக்கும் தேர்தல் என்பன தொடர்பாக இப் பேச்சுக்கள் இடம் பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

### பெல்ஜியம்...

செயல்கள், சிறிலங்கா அரசுக்கும், விடுதலைப்புலிகளுக்கும் இடையில் செய்யப்பட்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தம் என்பவற்றை இவர்கள் கண்காணிக்கவுள்ளனர்.

### தவறி விழ்ந்த..

விழ்ந்தபோதே இவ்வனர்த்தம் ஏற்பட்டது. பெட்டிச் சில்லில் அகப்பட்டு தலைநசியுண்டு அந்த இடத்திலேயே மரணமானார்.

விசுவமடு 10ம் கட்டையைச் சேர்ந்த விசுவநாதன் ராஜ்மோகன் என்பவரே பலியானவராவார். (14)

### சமாதானச் ..

இந்நிலையைச் சர்வதேச சமூகம் புரிந்துவருகிறது. தமிழ் மக்களுக்கு உண்மையான, நிரந்தரமான, அச்சமற்ற, கௌரவமான வாழ்வு ஏற்பட வேண்டுமானால் எமது தேசியத் தலைவரின் பின்னால் ஒன்றுபட்டு அணிதிரள்வோம். தலைவரின் வழி நடத்தலில் எந்தத் தடையையும் தாகர்ப்போம் என அவர் மேலும் கூறியுள்ளார்.

### இருதரப்பினரும்...

இந்தச் சம்பவம் தொடர்பாக அறிவிக்காமையினால் இதனைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு கண்காணித்து மோதலை தடுக்க முடியவில்லை.விடுதலைப் புலிகளின் கப்பலின் பணியாளர்களுக்கு என்ன நேர்ந்தது எனத் தெரியவில்லை. ஆனால் அவர்கள் சிறிலங்காக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டதற்கான ஆதாரம் இல்லை. ஐக்கிய நாடுகள் சபையின் கடல் சட்டங்களுக்கு ஏற்ப விடுதலைப் புலிகளின் கப்பலை சோதனையிட சிறிலங்காக் கடற்படையினருக்கு உரிமையுண்டு.

எனவே விடுதலைப் புலிகளின் கப்பல் தடுத்து நிறுத்தியதில் சிறிலங்காக் கடற்படையினர் கடல் விதிகளை மீறவில்லை.

போர்நிறுத்த ஒப்பந்தவிதி1-2 இன்படி இருதரப்பும் எந்த வலிந்த தாக்குதல் நடவடிக்கையிலும் ஈடுபடக்கூடாது...அத்துடன் போர்நிறுத்த ஒப்பந்த விதி1.3இன்கீழ் விடுதலைப் புலிகள் மீது வலிந்த தாக்குதல் எதுவும் நடத்தாது சிறிலங்காவின் இறைமையைப் பாதுகாக்கும் வகையில் தமது நடவடிக்கைகளைத் அரச படைகள் தொடரலாம்.

அசம்பாவிதங்கள் நடை பெறும் போது அதனைத் தமது இலத்திரனியில்கருவிகளில் பதிவு செய்யும் கடற்படையினர் அந்தத் தகவல்களை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் காண்பிக்கவேண்டும். அதனை அழித்துவிடக் கூடாது. கடலில் மோதல்களைத்தவிர்ப்பது தொடர்பாக போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு முன்னர்பரிந்துரை செய்த விடயங்களை அமுல்படுத்த விடுதலைப் புலிகளும்சிறிலங்கா அரசும் விரைவில் உடன்பாடு காண வேண்டும். மோதல் சூழ்நிலை ஏற்படும்போது இருதரப்பினரும் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிற்கு உடனடியாகத்தகவல் வழங்க வேண்டும். ஐக்கிய நாடுகள் சபையின் சட்டவிதிகளைக் கடைப்பிடிக்குமாறு தமது வர்த்தகக் கப்பல்களுக்கு விடுதலைப் புலிகள் அறிவுறுத்த வேண்டும் எனவும் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### நந்தி மித்திர”..

காக அதன் கப்டனிடம் கேட்டபோது அவை அழிக்கப்பட்டு விட்டதாக கப்பல் கப்டன் கூறியுள்ளார்.

இதன் காரணமாக இவ்வாறான சம்பவங்கள் நடைபெறும்போது இலத்திரனியல் தகவல்களை கண்காணிப்புக்குழு பரிசீலிக்கும் வரை அழிக்கக்கூடாது என கண்காணிப்புக்குழு கேட்டுள்ளது.

### கப்பலை...

எதுவும் இதுவரை எமக்குக் கிடைக்கவில்லை.

விடுதலைப்புலிகளின் கப்பலில் ஆயுதங்கள் இருந்தது என்பது வெறும் யூகங்கள் தான்.

கப்பல் மூழ்கிய போது போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு அங்கு இல்லை. எங்களுக்கு அது பற்றித் தெரியாது. அதற்கு ஆதாரங்கள் எதுவும் இல்லை.

விடுதலைப்புலிகளின் கப்பல் எங்கிருந்து வந்தது என்பது பற்றி எமக்குத் தெரியாது. லண்டன் லொஜிட்ஸ் நிறுவனத்தில் கப்பல்கள் பதிவு செய்யப்பட்டிருக்கும். பதிவு செய்யாத கப்பல்களும் கூட இருக்கின்றன. இது ஒரு பிரச்சினை இல்லை. விடுதலைப்புலிகள் அது ஒரு எண்ணெய்க் கப்பல் என்று கூறி விட்டார்கள். சிறிலங்கா அரசும் அதை மறுக்கவில்லை.

கடற்படை மறித்த போது கப்பல் நிற்கவில்லை. அதில் சரியான அவசியமான கொடி இருக்கவில்லை என்பது தான் இங்கு பிரச்சினை எனவும் தெரிவித்தார்.

## புதுக்குடியிருப்பில் வெள்ளம் வீடுகளுக்குள் புகுந்தது!

(அலுவலக செய்தியாளர்)

புதுக்குடியிருப்புப் பகுதியில் வடிகாலமைப்பைக் கருத்திற் கொள்ளாது வீதிப்புனரமைப்பு மேற்கொண்டமையால் வீடுகளினுள் வெள்ளம் புகுந்துள்ளது.

நேற்று பகல் புதுக்குடியிருப்புப் பகுதியில் பெய்த பெரும்மழை காரணமாக முல்லைத்தீவு வீதியை அண்டிய வீடுகளில் வெள்ளம் புகுந்துள்ளது. மேற்படி வீதிப்புனரமைப்புச் செய்யப்பட்ட நிலையில் வடிகால்கள் அமைக்காமலும் வீதிக்குக் குறுக்கே வெள்ளம் செல்வதற்கு மதகுகள் அமைக்காததாலும் வீதியை மேவி வெள்ளம் பாய்ந்ததோடு வீடுகளினுள்ளும் மழை நீர் புகுந்துள்ளது.

## சு.க. ஜே.வி.பி. கூட்டணியின் பெயராக நாட்டுப்பற்றாளர் மக்கள் முன்னணி

### -ஜே.வி.பி.செயலர் விமல் வீரவன்ச தெரிவிப்பு

சிறிலங்கா சுதந்திரக் கட்சிககும், ஜே.வி.பி.க்கு மிடையிலான கூட்டு ஏற்படுவதற்கான நடவடிக்கைகள் இறுதிக்கட்டத்தை அடைந்துள்ளதாக ஜே.வி.பி.யின் செயலாளர் விமல் வீரவன்சகடந்த வியாழனன்று தெரிவித்தார். இக்கூட்டுக்கு நாட்டுப்பற்றாளர்கள் மக்கள் முன்னணி (பி.பி.எவ்) எனப் பெயரிடப்படவுள்ளதாகவும் அவர் கூறினார்.

இக்கூட்டுத் தொடர்பாக ஒப்பந்தம் ஒன்றை மேற்கொள்ள சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க முழு முயற்சி எடுப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இரு கட்சிகளின் தலைவர்களுக்குமுள்ள அதிகாரங்கள் தொடர்பாக இரு கட்சிகளும் இறுதியாகப் பேசி முடிவெடுக்கவுள்ளன. ஆரம்பத்தில் கூட்டணியின் செயலாளர் பதவியை ஜே.வி.பி. தனக்கு வழங்குமாறு கோரியது. ஆனால் அதற்கு சிறிலங்கா சுதந்திரக்கட்சி சிரேஷ்ட உறுப்பினர்கள் விரும்பவில்லை.

இப்பொழுது கூட்டணியின் செயலாளராக அநுரா பண்டாரநாயக்கா நியமிக்கப்படலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

### புலிகளால்...

குகளை வேட்டையாட முற்பட்டமை ஆகிய குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு கடந்த மாதம் 19ம் திகதி முதல் இவர்கள் விடுதலைப் புலிகளால் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

விடுதலைப் புலிகளின் மூத்த தளபதி கேணல் கருணா அவர்கள் பார்வையிட்டு அவர்களை விடுதலை செய்யுமாறு உத்தரவிட்டதற்கு அமையவே நேற்று அவர்கள் விடுவிக்கப்பட்டனர்.

இவர்கள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினர் மூலமாக கையளிக்கப்பட்டனர்.


## சான்றிதழ் வழங்கும் விழா

தமிழீழ மாணவர் அமைப்பின் கணினி பயிற்சி நிலையங்களான தருமபுரம் தமிழரசன் கணினி பயிற்சி நிலையம், புதுக்குடியிருப்பு கணினி பயிற்சி நிலையங்களில் பயிற்சி நெறியினை நிறைவு செய்த வர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு.

இடம:- **மு/புதுக்குடியிருப்பு ம.வி.**

காலம:- **03/07/2003 வியாழன் பி.ப 3.00 மணி**

இரு பயிற்சி நிலையங்களிலும் இதுவரை பயிற்சி யினை, நிறைவு செய்த மாணவர்கள் மேற்குறித்த தினத்தில் கலந்து கொண்டு சான்றிதழைப் பெற்றுக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

(சி-8213) தமிழீழ மாணவர் அமைப்பு.



## சாவு அறிவித்தல்

### ஆறுமுகம் வேலும்மயிலும்
### (முள்ளியவளை)

**வதிரி கரவெட்டியைப் பிறப்பிடமாகவும், ஆஸ்பத்திரியடி முள்ளியவளையை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் வேலும்மயிலும் அவர்கள் 28.06.2003 (நேற்று) சனிக்கிழமை காலமானார். இவர் காலஞ் சென்றவர்களான திரு.திருமதி. ஆறுமுகம் வல்லிநாச்சி தம்பதி களின் கனிஷ்ட புத்திரனும், காலஞ் சென்றவர்களான வதிரி கரவெட்டியைச் சேர்ந்த கதிரவேலு, தம்பிஐயா, மாணிக்கம், மணியம், செல்லம் ஆகி யோரின் அன்புச் சகோதரனும், மகவதாஸ் (செல்வம்) (ஈழநாதம் பத்திரிகை யின் முன்னாள் நிருபர்) திரு.அரிகுக சிவம் (சிவம்) (உதவி முகாமையாளர், மக்கள் வங்கி, முல்லைத்தீவு), திருமதி.சிவறஞ்சனாதேவி (கணக்காளர்), திரு. உருத்திரன் (மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர்), செல்வி.திருலோகநாயகி (லோகா)(ஆசிரியை மு/கலைமகள் வித்தியாலயம், முள்ளியவளை), திரு. அருணோதயம் (அருண்) (மருத்துவ ஆய்வுகூட தொழில் நுட்பவியலாளர், லிகிதர் நிகோட் கச்சேரி, முல்லைத்தீவு) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற வர்களான சிதம்பரம், மௌனசாமி, சரஸ்வதி, பஞ்சாட்சரம், பராபரம், ஞானமூர்த்தி, கிருஸ்ணமூர்த்தி ஆகியோரின் அன்பு மைத்துனரும், வளர்மதி, செல்வராணி, சசிகலா ஆகியோரின் மாமனாரும், அஞ்சலி, அஞ்சயன், அஞ்சிகா, அருன்சிகா ஆகியோரின் பேரனும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 29.06.2003 ஞாயிற்றுக்கிழமை இன்று பி.ப. 4.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் நாவற்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.**

**இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள் கின்றோம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(2290)



## சாவு அறிவித்தல்

### வேலாயுதம் பரமசிவம்

வேலணை மேற்கைப் பிறப்பிடமாகவும், இல.345, 5ம் யூனிற், இராமநாதபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட வேலாயுதம் பரமசிவம் அவர்கள் 28.06.2003 சனிக்கிழமை அதிகாலை காலமானார். இவர் வேலாயுதம் பொன்னாச்சி தம்பதியின் சிரேஷ்ட புத்திரனும், இலட்சுமியின் அன்புக் கணவரும், சூரியகலா, திருமுருகா (லண்டன்), கண்ணதாசன் (லண்டன்), அருள் (லண்டன்), ஐங்கரன், கேதினி ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற வீரசிங்கம், மகேஸ்வரி சறோஜினிதேவி, காலஞ்சென்ற பேரின்பநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், சரஸ்வதி , தவராசா, புஸ்பலீலா, சந்திரன், காலஞ் சென்ற இந்திரன், ஸ்ரீகாந்தன், நாகேஸ்வரன், குணரத்தினம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ் சென்ற திருநாவுக்கரசு, வதனா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், லக்சன், டயானன், சதீஸ், செந்தூரன் (லண்டன்), லாவண்யா (லண்டன்), லக்ஷிகா (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற கைலாயபிள்ளை, செந்தமிழ்ச்செல்வி ஆசிரியை, தட்சணாமூர்த்தி, காலஞ் சென்ற காந்திமதி, கேதீஸ்வரி, இந்திராகாந்தி, யோகேஸ்வரி, மனோ ஆகியோரின் அன்புச் சகலனுமாவார்.அன்னாரின் ஈமக்கிரியை இன்று பிற்பகல் 3.00 மணிக்கு மம்மில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத் தருகின்றோம்.

**தகவல்:**
**ஐங்கரன்,**
**மகன்.**

(2289)


இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு ஜூன் மாதம் 29ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.